A|L 87 Day Class
பிரிவு III
ஆரம்பம்: 10-11-1986
Zoology : 1.30-2.30 p m
Botany : 2.30-3.30 p m.
Physics : 3.30-4.30 p m.
Chemistry; 4.30-5.30 p.m
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ 2/-

G.C.E. (A|L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி:
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞூ ஐப்பசி மீ 29 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 12 (15-11-1986) SANJEAVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :43

# லண்டனில் தமிழர் வீட்டுக்கு நெருப்புக் குண்டு வீச்சு!

## மூவர் தீயில் கருகிமரணம்; மற்றும் 6 பேர் ஆஸ்பத்திரியில்

லண்டன், நவ. 14

லண்டன் நகரத்தைச் சேர்ந்த ஈஸ்ட்ஹாம் என்ற இடத்தில் உள்ள இலங்கைத் தமிழர்களின் வீடு ஒன்றுக்கு நெருப்புக் குண்டு வீசப்பட்டது.

இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை நடந்த இச்சம்பவத்தில் மூன்று இளம்தமிழர்கள் தீயில் கருகி மாண்டனர். மற்றும் ஆறு தமிழர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இறந்தவர்களின் பெயர் விவரம் இச்செய்தி எழுதப்படும் வரை அறிவிக்கப்படவில்லை.

வீட்டின் ஜன்னல் வழியாக நெருப்புக் குண்டு வீசப்பட்டது. இதனால் வீடு தீப்பற்றியது. தீக்குள் சிக்கி இவர்கள் உயிரிழந்தனர்.

வீட்டின் மேல்மாடியில் படுக்கை அறையில் இவர்களின் கருகிய சடலங்கள் கண்டுபிடிக்கப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரச படையினருக்கு மேலும் ஆயுதங்கள்
### பருத்தித்துறையில் குவிப்பு

வல்வெட்டித்துறை, நவ. 15

பருத்தித்துறைக் கடலில் தரித்து நின்ற நான்கு பெரிய சப்பல்களில் இருந்து நேற்றுக் காலை முதல் ஆயுதங்கள் இறக்கப்பட்டு பருத்தித்துறை இராணுவ முகாமுக்குக் கொண்டு வரப்பட்டன.

விசைப்படகுகள் மூலம் முகாமுக்கு ஆயுதங்கள் கொண்டு வரப்பட்ட சமயம் முகாமில் இருந்து ஷெல்தாக்குதலும் இடம் பெற்றது.

நண்பகல் அளவில் கடற்படைக் கப்பல்கள் காங்கேசன்துறையை நோக்கிச் சென்றன. (உ - எ - 160)

## கலைஞர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், நவ.15

இந்தியாவில் தடுப்புக் காவலில் உள்ள தமிழீழ விடுதலைப் போராளிகளை விடுவிக்கக் கோரி கலைஞர்கள், இலக்கியப் படைப்பாளிகள் நாளை மறுதினம் யாழ் நகரில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்துவர்.

இதற்கானஒழுங்குகளை தமிழர் கலாசார அவையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சகல கலை இலக்கிய படைப்பாளிகளும் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கானஆலோசனைக் கூட்டம் ஒன்றும் இன்று காலை 10மணிக்கு வின்ஸர் கலையரங்கில் நடைபெறுகின்றது.

இக்கூட்டத்தில் சகல கலை இலக்கிய அன்பர்களையும், மன்றங்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழர் கலாசார அவை வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (உ-10)

## தொடர்ந்து நேற்றும் உண்ணாவிரதப் போர்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டதை ஆட்சேபித்து நேற்றும் இரண்டாம் நாள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும், யாழ் - பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்களும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர்.

விஜிதரனின் தாயார் கலங்கிய கண்களுடன் நேற்றைய உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார்.

பல பாடசாலை மாணவர்களும் உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

நேற்றைய உண்ணாவிரதத்தை பேராசிரியர் மௌலவி. கே. எம். எச். காலிதீன் அவர்கள் முடித்து வைத்தார். (உ-10)

## போராளிகளை விடுவிக்கக் கோரி குடாநாட்டில் பரவலாக உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், நவ.15

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் உட்பட தமிழகத்தில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் போராளிகள் குழுக்களின் பிரமுகர்கள் அனைவரையும் விடுவிக்கக் கோரி குடாநாட்டின் பல பாகங்களிலும் தொடர்ந்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் உண்ணா விரதங்களும் நடைபெற்று வருகின்றன.

### ஆனைக்கோட்டையில்

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவிலடியில்இடம்பெற்ற உண்ணாவிரதத்தில்நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினர்.

சுதுமலை அம்மன் கோவில், நவாலி சென். பீட்டர்ஸ் தேவாலயம் ஆகிய இடங்களிலும் உண்ணாவிரதங்கள் நடைபெற்றன.

### மானிப்பாயில்

மானிப்பாய் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து காலை பத்து மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலம் கொக்குவில் மஞ்சவணபதி ஆலயத்தில் முடிவடைந்தது.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த ஊர்வ

(8ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்களிடமிருந்து வெடிமருந்துகள் மீட்பு

வல்வெட்டித்துறை, நவ. 15

கடந்த வியாழன் நள்ளிரவு தொண்டமானாறு முகாமில் இருந்து வெடிமருந்துகள், வயர்கள் சகிதம் வெளியேறிய சிப்பாய்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மோட்டோ ஷெல் குண்டுகள் கொண்டு தாக்கினர்.

இத்தாக்குதலினால் சிப்பாய்கள் கொண்டுவந்த வெடிமருந்து, வயர்களை அப்படியே போட்டு விட்டு பின்னோக்கிச் சென்றனர்.

சிப்பாய்கள் விட்டுச் சென்ற இரண்டு பெட்டி வெடிமருந்துகள், கண்ணிவெடிகளுக்கு பயன்படுத்தப்படும் வயர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன என்று தெரிய வருகிறது.

கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல் நடந்து கொண்டு இருக்க சிப்பாய்கள் முகாமை விட்டு வெளியேறி கிராமத்துக்குள் நுழைய முயற்சித்த போதே இத்தாக்குதல் இடம் பெற்றது. (உ-எ-160)

## வல்லையில் காயமுற்ற வயோதிய நபர்
### 4 நாட்களின் பின் மீட்பு

பலாலி, நவ. 15

கடந்த செவ்வாய்க்கிழமை வல்லை வெளியில் ஹெலிக்கொப்டரில் வந்து இறங்கிய சிப்பாய்களினால் சுடப்பட்டு காயமுற்ற வயோதிபர் நான்கு நாட்களின் பின்னர் நேற்று மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் பற்றி மீட்கப்பட்ட 59 வயதான எஸ். இராமையா சொன்னதாவது:-

செவ்வாய் அதிகாலை அச்சுவேலிக்கு நான் சைக்கிளில் வந்த போது வல்லைவெளி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

15—11—1986
சனிக்கிழமை

சுபநேரம்:
3.07 முதல் 4.37 வரை
ராகுகாலம்:
9.07 முதல்10.37 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## தொண்டமனாறில் நேற்று பொதுமக்கள் சிலர் கைது

வல்வெட்டித்துறை, நவ. 15

தொண்டமனாறுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த பொதுமக்கள் சிலர் நேற்றுத் தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்ற சமயம் இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

இச் சம்பவம் பற்றி அறியவருவதாவது; கடந்த சில தினங்களாக இடம்பெற்று வந்த மோதல் காரணமாக தொண்டமனாறுப் பகுதியில் உள்ள பெரிய கடற்கரைப் பக்கம் வாழ்ந்து வந்த குடிமக்கள்உடுப்பிட்டிக்கு இடம் பெயர்ந்து சென்று இருந்தனர்.

இவர்களில் சிலர் நேற்று வீடுகளுக்குத் திரும்பிஉடுபுடைவைகளை எடுத்துவர முயற்சித்தனர். அப்படிச் சென்றவர்களை இராணுவத்தினர் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

ஆண்களைக் காணவில்லை என்று தேடி உறவினர்களான பெண்கள் சென்றபோது அவர்களும் இராணுவத்திடம் அகப்பட்டுக் கொண்டனர்.

இராணுவத்திடம் பெண்கள் தங்கள் நிலை

(8ஆம் பக்கம் பார்க்க)

## பெங்களூர் பேச்சுக்கு ஜே.ஆர்.இன்று பயணம்

கொழும்பு, நவ.15

இன்று சனிக் கிழமை பகல் 11 மணியளவில் ஜனாதிபதி ஜெயவர்த்தன கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து பெங்களூர் பயணமாகிறார்.

'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு பெங்களூரைச் சென்றடையும் முதல் தலைவர் இவராவார்.

திரு. ஜெயவர்த்தனவை வரவேற்பதற்காக பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி ஏற்கனவே பெங்களூர் வந்துவிட்டார்.

திரு. ஜெயவர்த்தனவுடன் திருமதி ஜெயவர்த்தனவும் செல்கிறார். வெளிவிவகார அமைச்சர் சாஹுல் ஹமீது ஏற்கனவே பெங்களூர் சென்றுவிட்டார்.

இனப்பிரச்சினைபற்றிய முக்கியபேச்சுக்கள் நாளை ஞாயிறு நண்பகல் நந்தி ஹில்ஸ் ஹோட்டலில் இடம் பெறும். (உ-எ)

"நிழலும் நிஜமும்"
வி. எஸ். சுப்பிரமணியம் எழுதும் குறுநாவல் மூன்றாம் பக்கத்தில் ஆரம்பம்.

## புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 15

பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து இரண்டு வாகனங்களில் வெளியே வர முயன்ற சிப்பாய்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்று மாலை 4 மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது. (உ-10)

## கருத்துக் கலசம்

### 'எய்ட்ஸ்' ஆபத்து

உலகத்தின் ஆகப்பிந்திய ஆபத்தான நோய் 'எய்ட்ஸ்' ஆகும். இருதயநோய், புற்றுநோய் ஆகியவையே இதுவரை உலகின் முதலணி ஆட்கொல்லி நோய்கள் எனக் கருதப்பட்டன. அவற்றை விஞ்சி முதலாம் இடத்தை இப்போது வகிப்பது 'எய்ட்ஸ்' தான்.

நோய்களை எதிர்க்கும் உடம்பின் இயற்கைச் சக்தியையே 'எய்ட்ஸ்' வைரஸ் அழித்துவிடுகிறது. அதனால் உடம்பு பல நோய்களுக்கு உட்படும் ஆபத்து உண்டாகிறது. அதன் விளைவு மரணம் விரைவில் வந்து விடுகிறது.

இந்த நோய் இப்போது மேலை நாடுகளில் தீவிரமாகப் பரவி வருகிறது. அமெரிக்கா பிரிட்டன் போன்ற நாடுகளில் அதுபெரும் தேசியப் பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

பெரியவர்கள் மட்டுமன்றி சிறுவர்கள் கூட இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உல்லாசப் பயணிகள் என்ற பெயரில் வரும் மேல் நாட்டவர்கள் மூலம் கீழைத் தேசங்களுக்கும் 'எய்ட்ஸ்'பரவும் அபாயம் உண்டு.

தென்னிலங்கையில் அந்த ஆபத்துக்கு அறிகுறி தென்பட்டு விட்டது. அங்கு வந்து தங்கிய பிரிட்டிஷ் பிரசை ஒருவர் 'எய்ட்ஸ்' நோயாளி என ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் 6 பேருக்கு 'எய்ட்ஸ்' கண்டிருப்பதாக செய்தி வெளிவந்ததும் ஸ்ரீலங்காவின் சுகாதார மந்திரி 'ஆ கூ' போட்டதை மறக்க முடியாது. போராளிகள் மூலம் தமிழகத்தில் இருந்து 'எய்ட்ஸ்' இலங்கை வரப்போவதாக கற்பனையில் சஞ்சரித்து மாநாடுகள், கூட்டங்கள் எல்லாம் தொண்டை கிழியக் கத்தினர். இப்போது மட்டும் 'கப்சிப்'என்று இருக்கிறார்!

தென்னிலங்கையிலிருந்து இப்போது தமிழ்ப் பிரதேசங்களுக்கு 'எய்ட்ஸ்' பரவும் அபாயம் உண்டாகி இருக்கிறது.

தெற்கில் உள்ளஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் தமிழர் ஒருவருக்கு தெரிந்தோ தெரியாமலோ 'எய்ட்ஸ்' நோயாளியின் இரத்தம் ஏற்றப்பட்டு விட்டால் நிலைமை எப்படி ஆகும் என்று நினைத்துப் பார்க்கவே மனம் இடிக்கிறது!

எங்கள் கதவிலும் 'எய்ட்ஸ்' வந்து தட்டலாம். ஆகையால் அது விடயத்தில் கண்ணை மூடிக் கொண்டு இருந்துவிடலாகாது. குறிப்பாக வெளிநாடுகளுக்குப் பயணம் செய்து வருபவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இந்நோய் 'காவி'களாக இருந்துவிடக் கூடும்.

ஸ்ரீலங்கா அரசின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்: போராளிகள் முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் பருத்தித்துறையை இணைக்கும் பாதையில் உள்ள வல்லைப் பாலத்தை கடந்த புதன்கிழமை முதல் தமது போராளிகள் மக்களுடன் இணைந்து திருத்தி வருவதாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் அறிவித்திருக்கிறது.

கடந்த செவ்வாக்கிழமையன்று ஹெலியில் வந்த அரச படையினர் இப்பாலத்தைக் குண்டு வைத்துக் தகர்த்தது தெரிந்ததே. (உ)

## மீண்டும் ஈழ வானொலி

யாழ்ப்பாணம், நவ. 15

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வானொலிச் சேவையான ஈழவானொலி இன்று முதல் மீண்டும் ஒலிக்கத் தொடங்குகிறது.

தினந்தோறும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை 7010கிலோ ஹேர்ட்ஸ் - 41 மீற்றர் குறுக்கலை 2 அலைவரிசையில் இந்த சேவை இயங்கும். (உ)

## மதகு தகர்ப்பு

திருகோணமலை, நவ. 15

தம்பலகமம் - கிண்ணியா வீதியில் உள்ள மதகு ஒன்று கடந்த வாரம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது.

இதனால் இவ்வீதியூடாக நடைபெற்று வந்த போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. (உ-எ-150)

## எழுக மலையகம் முத்திரை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ 15

மலையக மக்களின் பிரசாஉரிமை மறுக்கப்பட்ட தினத்தை முன்னிட்டு இன்று 'எழுக மலையகம்' என்ற ஈழம் தபால் தலை வெளியிடப் படும்.

மலையக மக்கள் மீதான ஒடுக்குமுறையைப் பறைசாற்றும் முகமாகவும், மலையக மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உத்வேகமளிக்கும் நோக்குடனும் இம்முத்திரை வெளியிடப்படுவதாக ஈ. பி.ஆர்.எல்.எவ் இயக்கம் அறிவித்திருக்கிறது.

முத்திரை வெளியீடும் 'தேசியம் பாடும் முகாரிகள்' கவிதா நிகழ்வும் இன்று மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். (உ)

## புதுக்குடியிருப்பிலும் போராட்டம்

முல்லைத்தீவு, நவ. 15

காணமற்போன யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரி முல்லைத்தீவு — யாழ்ப்பாணம் வீதியில் புதுக்குடியிருப்புச் சந்தியில் நேற்று வீதித் தடைப் போராட்டம் நடந்தது.

புதுக்குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் இப்போராட்டத்தை நடத்தினர்.

பிற்பகல் 1 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டம் மாலை வரை நீடித்தது. (உ-எ-92)

## ஹமீத் - திவாரி சந்திப்பு

பெங்களூர், நவ.14

இலங்கை வெளி விவகார அமைச்சர் சாஹுல் ஹமீதுடன் இந்தியவெளி விவகார அமைச்சர் என். டி. திவாரி இன்று (வெள்ளி) சுமார் ஒரு மணித்தியாலம் இலங்கை இனப் பிரச்சினை பற்றிப் பேச்சுக்கள் நடத்தினர்.

சமரசப் பேச்சுக்கள் மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் படவேண்டும் என்ற உறுதியை இரண்டு அமைச்சர்களும் பேச்சுக்களின் போது வெளிப்படுத்தினர். (உ-எ)

## கிளிநெச்சியில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம்,நவ.15

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து நேற்று காலை 9 மணியளவில் வெளியேறி வந்த இராணுவத்தினரைக் கண்டு ஓடியவர் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இதனால் கணேசபுரத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்பவர் பலியானார்

சுமார் 150 பொது மக்கள் படையினரால் கைதுசெய்யப் பட்டனர்

எனினும் அவர்களில் 15 பேர் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். (உ-10)

## தொடர்ந்து ஷெல் தாக்குதல்

அச்சுவேலி, நவ. 15

வியாழக்கிழமை இரவு ஏழு மணி தொடக்கம் நேற்று மாலைவரை தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து வல்லை-அச்சுவேலி சந்தி, அச்சுவேலி வடக்கு, தம்பாலை, வல்லைச் சுடலை வெளி, வல்லை அச்சுவேலி சந்தி, ஊரியான், உலவிக்குளம் பிள்ளையார் கோயிலின் வடகிழக்கு வயல்வெளிஆகியவற்றை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

வல்லை - அச்சுவேலிச் சந்தியில் உள்ள திரு. சின்னத்தம்பி தர்மலிங்கம் என்பவருடைய வீட்டில் மட்டும் 4 ஷெல்கள் விழுந்தன. இதனால் வீடு பலத்த சேதமுற்றது. (உ-11-119)

## ஈழவர் முன்னணியின் ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ.15

எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஈழவர் முன்னணியினரால் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

தமிழகத்தில் தமிழீழப் போராளிக் குழுக்களின் தலைவர்களைத் தடுப்புக் காவலில் வைத்திருப்பதைக் கண்டித்தே இந்த ஊர்வலம் நடத்தப்படும்.

நாச்சிமார் கோயிலடியில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பித்து அடைக்கலமாதா கோவிலில் ஊர்வலம் முடிவடையும். (உ-10)

## பஸ்கள் தாமதம்

யாழ்ப்பாணம், நவ. 15

நேற்றுக் காலை பத்து மணி அளவில்கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அருகாமையில் பதுங்கி இருந்த சிப்பாய்கள் பல வாகனங்களை மறித்து திடீர் சோதனையிட்டனர்

இதன் காரணமாக யாழ். நோக்கி வந்த பல லொறிகள், பஸ்கள் தாமதமாகவே வந்து சேர்ந்தன. (உ-10)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமை விலங்கை உடைத்தெறிய முனைந்து விட்டனர் மலையகத் தொழிலாளர்

முதுகில் கனக்கும் கூடையுடன் கையில் விலங்கிடப்பட்டு வாயில் பூட்டு இடப்பட்டு இலங்கையின் பொருளாதாரத்தைத் தலையில் சுமக்கும் இலங்கை மலையகத்தவர்களது பிரஜாவுரிமையானது நீக்கப்பட்டு இன்றுடன் (15-11-86) 38 ஆண்டுகளாகின்றன.

இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் 60 வீதத்தைத் தோட்டத் தொழிலாளர்களே ஈட்டிக் கொடுக்கின்றனர். இவர்களால் வருடமொன்றுக்கு 400 கோடி ரூபா இலங்கைக்கு சம்பாதித்துக் கொடுக்கப்படுகின்றது. ஏறத்தாழ எண்ணூறு ஆயிரம் இந்திய வம்சாவழியினர் தற்போது இலங்கையில் உள்ளனர். இவர்களில் 60 வீதத்துக்கு மேற்பட்டோர் அடிப்படைக் கல்வியறிவு கூட இல்லாதவர்கள்.

முதலாளித்துவ வாதிகளினால் சுரண்டலுக்குட்படுத்தப்பட்டு வழங்கப்படும் சிறுதொகைப் பணமே அவர்களது உயிர்நாடியாகும். இவர்களது இருப்பிட விஸ்தீரணமோ 100சதுர அடி பரப்பே; இதற்குள்ளேயே மலையக மக்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

1823 ஆம் ஆண்டு 'சிங்கப்பிட்டியா' எனும் கிராமத்தில் கோப்பித் தோட்டத்தில் வேலை செய்வதற்கென 14 இந்தியர்கள் 'கென்றி போர்ட்' எனும் பிரித்தானியரால் கொண்டு வரப்பட்டனர்.

இவர்களது அடிதுடிப்பான வேலையையும், பாமரத்தன்மையையும் கண்ட பிரித்தானியர் பெருமளவில் தோட்டத் தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டுவரத் தலைப்பட்டனர்.

இந்தியர்களது வருகையையும் துரித வளர்ச்சியினையும் சிங்களமிதவாதிகள் கண்ணும் கருத்துமாக அவதானித்து வந்தனர்.

1948ம்ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த வுடன் பிரதமராகபதவி யேற்ற டி. எஸ். சேனநாயக்கா அதே ஆண்டு நவம்பர் 15இல் மலையகத்தவர்களது பிரஜாவுரிமையைப் பிடுங்கிக் கொண்டார். இதனூடாக மலையகத்தவர்களது அடிப்படை, அரசியல், பொருளாதார சுதந்திரங்கள் மறுக்கப்பட்டன இதைத் தொடர்ந்து 1956 ஆம் ஆண்டு எஸ். டபிள்யு. ஆர். டி. தனிச்சிங்களச் சட்டத்தை இயற்றினார். அதனால் முழுத்தமிழர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். மலையக மக்களுக்கு வெந்த புண்ணில்வேல் பாய்ச்சியது போல் இருந்தது இந்தச் செயல்.

பொதுவாக நோக்கின் இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு அரசுகளும் தமிழர்களின், குறிப்பாக மலையக மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டன.

இவ்வாறாக உரிமைகளில் கைவைத்த அரசு மலையகத்தவர்களது நிலங்களில் கைவைக்கத் தொடங்கியது. அபிவிருத்தி அல்லது மாற்றுப்பயிர்ச் செய்கை என்ற அடிப்படையில் மக்களினது காணிகளை நேரடியாகவோ அல்லது முதலாளித்துவம் சார் நிறுவனங்களினூடாகவோ அபகரிக்கத் தொடங்கியது.

அரசின் ஆதரவோடு மலையகப்பகுதியில் குடியமர்த்தப்பட்ட குண்டர்கள் 58, 77, 81, 83 ஆம் ஆண்டுகளில் மலையக மக்களைத் தாக்கினார்கள். வீடுகள் தீயிடப்பட்டன. ஏராளமானோர் கொலை செய்யப்பட்டனர், கற்பழிக்கப்பட்டனர். ஆட்சியாளர்களல் முன்னின்று நடத்தப்படும் இத்தகைய தாக்குதல்கள் ''கலவரம்'' என்ற போர்வையால் இழுத்து மூடப்பட்டது.

குடியுரிமை, நிலவுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை என்ற அடிப்படை உரிமைகளை இழந்து மலையகத்தவர்கள்




1948 நவம்பர் 15 ஆம் நாள் மலையகப் பாட்டாளிகளின் குடியுரிமை பறிக்கப்பட்ட நாள்.

இன்று 36 ஆண்டுகள் நிறைவு பெறும் அந்த நாளை வேதனையுடன் உற்று நோக்குகிறான் தமிழன்.

அந்த நாளை நினைவு கூருமுகமாக இக்கட்டுரை பிரசுரமாகிறது.

நடைப்பிணங்களாகத் திரிந்த சமயத்திலே சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தமானது கைச்சாத்தானது. இதனூடாகவும் மலையகத்தவர்கள் பிரச்சினைக்கு உருப்படியான எவ்வித தீர்வும் கிட்டவில்லை சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தம் நடைப்பிணங்களாகத் திரியும் மக்களை பகிர்ந்து நாடு கடத்தும் இணக்கம் ஒன்றை ஏற்படுத்தியது.

இதன்படி ஒன்பது இலட்சத்து எழுபத்தையாயிரம் பேரில் மூன்று லட்சம்பேரை இலங்கை ஏற்பது என்றும் ஐந்து லட்சத்து இருபத்தையாயிரம் பேரை இந்தியா ஏற்பது என்றும் மிகுதி ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் பேரைப்பற்றிப் பின்னர் தீர்மானிப்பது என்றும் ஒப்பந்தத்தினூடாகச் சொல்லப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களது உரிமைகளைப் பறித்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இலங்கைத் தமிழர்கள் அனைவருமே பாதிக்கப்பட்டார்கள். உழைக்கும் வர்க்கத்தினது உணர்ச்சிபூர்வமான செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதே அரசின் நோக்கமாக இருந்தாலும் மாறாகப் போராட்டத்தின் சிறந்த வளர்ச்சிக்கு அதுவே வித்திட்டது எனலாம்.

மலையகத்தவர்கள் உரிமைகள் ஆரம்ப காலத்தில் பறிக்க முற்பட்டபோது கடுமையாக எதிர்த்துக் குரல் கொடுத்தவர்கள் தந்தை செல்வா, வன்னியசிங்கம், மற்றும் அவர்கள் வழித்தோன்றல்களுமாவர். இதனை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. நாடற்ற பிரச்சினை ஏற்பட்ட காலத்திலேயே தமிழரசுக் கட்சியானது தோற்றம் பெற்றது. ஆனால் அது பின்னர் நடுத்தர வர்க்கத்தினரது சிந்தனையையும் அபிலாசைகளையுமே பிரதிபலித்தது எனலாம்.

1976 ஆம் ஆண்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்தபோது அதன் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு சௌ. தொண்டமான் அவசர அவசரமாக அட்டன் நகரில் இலங்கைத் தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் மாநாட்டைக்கூட்டி மலையகத்தவர் பிரச்சினைக்கு ஈழம் தீர்வாகாது என அறிவித்தார்.

இவரது கூற்றும் செயன் முறையும் பிழையென 77 ஆம் ஆண்டு கலவரம் எடுத்துக்காட்டியது இதனூடாக பல்லாயிரக்கணக்கான மலையக மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் பெருமளவு மலையக மக்கள் பூர்வீக தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு இடம்பெயரத் தொடங்கினார்கள். இத்தகைய இடப்பெயர்வு ஏகாதிபத்திய சகாக்களை அச்சமுற வைத்தது.

அண்மைக் காலத்தில் உண்மைநிலையினை புரிந்து வரும் மலையக மக்கள் அகிம்சைவழியில் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். தமது போராட்டத்தை முறியடிக்க முனைபவர்களை அடித்து விரட்டவும் துணியும் அளவுக்கு அவர்கள் வந்துவிட்டார்கள்.

இதைத் தொடர்ந்து ஆட்சியாளர்கள், தேயிலைத் தோட்டங்களை இராணுவ மயப்படுத்தினர். முகாம்கள் அமைக்கப்பட்டன. தோட்டங்களில் இருந்து வெளியேற அனுமதி மறுக்கப்பட்டது வெளியார் தோட்டங்களுக்கு உட்செல்வதும் தடுக்கப்பட்டது.

எனினும் தொழிலாளர் வர்க்கம் அஞ்சவில்லை; தளரவில்லை. தமது இலட்சியப்போராட்டத்தை வென்றெடுக்க அடிமை விலங்கை உடைத்தெறிய முனைந்து விட்டார்கள்.

ஆர். எஸ். ஞானப்பிரகாசம்

# அரசாங்க அலுவலகங்களில்.... "சிகதி"

## சிங்களத்தில் கடிதங்கள்--

அரச திணைக்களங்களில் கடமைபுரியும் பணியாளர்களுக்கு நிதி அமைச்சரின் வரவு செலவுத்திட்டத்தில் சம்பள உயர்வு இல்லாதது ஏமாற்றம்தான். பாதுகாப்பிற்குக் கூடுதலான ஒதுக்கீடு பாதுகாப்பிற்குப்பொறுப் பானவர்களுக்குசம்பள உயர்வு–அவர்களுக்கு இல்லாத சம்பள உயர்வா? மக்களை அவர்கள் பாதுகாக்கவில்லை. மந்திரிகளைக் கொண்ட சபையின் அரசைப் பாதுகாக்கின்றார்கள். பணத்தைக் கூட்டிக் கொடுப்பது மந்திரிகள் தங்கள் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தவோ? இது எத்தனை நாட்களுக்கோ? வரவு செலவுத் திட்டத்தில் பங்கு கொண்டு பேசிய அத்தனக்கல தொகுதி உறுப்பினர் ரோம் சாம்ராஜ்யம் அழிந்ததற்குக்காரணமே மதுவும் மாதுவும்தான் என எச்சரிக்கை செய்துள்ளார், காலமும் காலனும்தான் பதில் சொல்லவேண்டும்.

* * *

திணைக்களங்களில் கடமைபுரியும் பணியாளர்களை உரிய நேரங்களில் கருமங்களை ஆற்றி பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேல் அதிகாரிகள் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட கடமைகள் செவ்வனே செய்யப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்தல் வேண்டும். பணியாளர்கள் செய்வதைக் கண்டு கொள்வோம் என்றநிலை மாறவேண்டும். திறைச்சேரி திணைக்களம் ஒன்றில் கடமை புரிந்த உயர் சிவில் அதிகாரி காலையில் வந்ததும் லிகிதர்களின் இடங்களுக்குச் சென்று மேசை லாச்சிகளைத் திறந்து கோர்வைகளைப் பார்வையிடுவாராம். இதனால் அங்கே வேலைகள் மிகவும் துரிதமாகவும் காலதாமதமின்றியும் நடைபெற்றன. இதனை அரச அதிகாரிகள் கருத்தில் கொள்வது நல்லது. காரியாலயம் வருவதும் பத்திரிகைகள் படிப்பதும் தம் சொந்தவேலைகளைக் கவனிப்பதும் என்று மட்டும் நின்றுவிடக்கூடாது.

* * *

தபால் நிலையங்கள் பற்றி பல வாசகர்கள் குறைப்பட்டு எழுதியுள்ளார்கள். நிலைமையைத் தங்களுக்கு சாதகமாக்கிப் பணியாளர்கள் பல குறைபாடுகளுக்கு தம்மை ஆளாக்கிக் கொள்வது எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுவான குறைபாடு, கடமை நேரங்களில் பணியாளர்கள் சமுகம் கொடுப்பதில்லை, என்பதேயாகும். சில நிலையங்கள் ஒற்றைக் கதவிலும் பூட்டப்பட்டும் இருப்பதாகத் தெரிகிறது. இந்நிலை உடன் மாற்றப்பட்டு பொதுமக்களுக்கு உதவி செய்யும் மன உணர்வை பணியாளர்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் இந் நிலையங்கள் பற்றிய மேலதிக விபரங்களை நாம் தெரிவிக்காமல் இருக்கமுடியாது.

* * *

அரசாங்கத் திணைகளங்களில் இருந்து இன்றும் கடிதங்கள் சிங்களத்தில் தான் வந்துகொண்டிருக்கின்றன. தமிழ்ப்பகுதிகளுக்கு தமிழில்தான் கடிதங்கள் அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தும் தொடர்ந்தும் இந்நிலை நீடிக்கிறது. இதனைச் செயற்படுத்த மந்திரிசபை ஒரு உபசபையையும் நியமித்திருந்தது. உபசபையினர் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பது தெரியவில்லை. நிச்சயமாக கூட்டத்துக்குப் போனால் கிடைக்கும் அலவன்ஸ் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கமுடியாது.

மாணவர்கள் ஒழுக்கத் தினைப்பேண வழிகாட்டியாக உள்ள ஆசிரியர்கள் சரியான முறையில் வழிகாட்டவேண்டும். இவர்கள் தான் நாட்டின் எதிர்கால பிரசைகளை உருவாக்குபவர்கள். அவர்கள் ஒழுக்கப்பாதையில் நின்றும் மாறக்கூடாது.

திணைக்கள வட்டாரக் கல்வி உத்தியோகத்தர்கள் பாடசாலைகளுக்குச் சென்று படிவங்களில் கையொப்பம் போடுவதுடன் நின்றுவிடாது உரிய நேரத்திற்கு அதிபர்கள் ஆசிரியர்கள் சமுகம் கொடுக்கிறார்களா என்பதை அவதானித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது மேலதிகாரிகளின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வந்தாலாவது எதிர் காலத்தில் இதனைத்தவிர்த்துக் கொள்ளவும்– திருத்துவதற்கும் வழி உண்டு.

# அறிவினைக் குறிப்பதே திருவிளக்கு வழிபாடு

நாளை ஞாயிற்றுக் கிழமை பூரணை விரதம், திருக்கார்த்திகை விரதம், சர்வாலய தீபம், (வீடுகளில் தீபம்) முதலியன ஒருமித்து வருவது சிறப்பானது.

தமிழகத்திலும் ஈழத்திலும் சிறப்பாக ஆதி காலம் தொடக்கம் தமிழ் மக்களால் கொண்டாடப்பட்டு வரும் பண்டிகை தீபத் திருநாளாகும்.

இத்திருநாள் கார்த்திகை மாதத்திலே வரும் கார்த்திகை (கிருத்திகை) நட்சத்திரத்திலே கொண்டாடப்படுவது. கார்த்திகை நட்சத்திரத்திற்கு முன்னர் பரணியும் பின்னர் ரோகிணியும் உள. கார்த்திகைப் பூரணை சில காலத்தில் கார்த்திகை நட்சத்திரத்துடன் நிகழும். சில காலத்தில் பரணியோடு கூடி நிகழும். சில சமயம் ரோகிணியுடன் கூடி வரும். இவற்றுட் கார்த்திகையுடன் பௌர்ணமி சேர்ந்தால் 'பத்ம யோகம்' எனப்படும். ரோகிணியிற் சேர்ந்தால் 'மகா கார்த்திகை' எனப்படும்.

இன்றைய தினம் வீடுகளிலும் மற்றைய இடங்களிலும் தீபமேற்றி குதூகலமாகக் கொண்டாடுவர். இத்தினத்தில் எல்லாத் திருக்கோயில்களிலும் திருவிழா நடைபெறும். உலர்ந்த தென்னை பனை, கமுகு, வாழைத் தண்டு முதலியவற்றை தீபதண்டமாக கோயிற் சந்நிதானத்தில் நட்டு, உயர்ந்த (மட்டையுள்ள) பனை ஓலையால் விமானம் போல உயரமாக மூடிக் கட்டிய 'சொக்கப் பனையில்' அக்கினி மூட்டி, அது சுவாலையாக எரியும் பொழுது சோதி சொரூபமாகவும், திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவித்து வணங்குவர். 'சுட்கப்பனை' என்னும் சொல்லு காலக்கிரமத்தில் 'சொக்கப் பனை' யென மருவி வந்தது எனக் கூறப்படுகின்றது. சுட்கம் என்பது வரட்சியைக் குறிக்கின்றது. முனிவர்களையும் சாதுக்களையும் ஹிம்சித்து வந்த சில அசுரர்களின் தேர்களைச் சிவபெருமான் கொளுத்தி விட்டார் என்ற ஒரு புராணக் கதை சொக்கப் பனை கொளுத்துவதற்கு ஒருவகை ஆதாரமாகக் கூறப்படுகின்றது.

திருவண்ணாமலையில் திருக்கார்த்திகையில் நடைபெறுவது ஒரு திருவிளக்குத் திருநாளாகும். அங்கு ஆயிரக் கணக்கான திருவிளக்குகளால் கோயிலும் அவ்வூரும் அலங்கரிக்கப்பட்டு, இறைவனை நெருப்பின் வாயிலாக வணங்குகின்றார்கள். இதைப்போன்று தமிழர்கள் வாழும் எல்லா ஊர்களிலும் நடைபெறும் திருவண்ணாமலையில் மலைபோல் கொப்பறையில் கற்பூரத்தை யிட்டுக் கொழுத்தி மக்கள் 'அரோகரா' என்று பொங்கழல் உருவனைப் பூசிப்பதைப் போல் ஒவ்வொருவூரிலும்சொக்கப் பனை கட்டித் தீ வளர்த்து வணங்குகின்றனர்.

பண்டைய முறைப்படி விளக்கேற்றுவதே சிறப்புடையது. அகல், திரி, எண்ணெய் தீபம் முதலியன பல தத்துவ நுட்பங்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

உதாரணமாக உடல் என்னும் மனையில் இருக்கும் உள்ளமாகிய பாத்திரத்தில் உயிரென்னும் திரியை இட்டு உணர்வாகிய நெய்யை ஊற்றி, பிராணன் என்னும் காற்றை நிறுத்தி, அறிவுச் சுடரை ஏற்றி, அன்பினால் இடைவிடாது தூண்டிக் கொண்டிருந்தால் ஆணவமாகிய மாயை இருள் அகலும். சிவ பரஞ்சோதி தரிசனம் கிடைக்கும்.

விளங்கச் செய்வதே விளக்கு. இருப்பதை உள்ளவாறு காட்டுவதே விளக்கு. மறைப்பதை நீக்க மறைபட்டதை மக்களுக்குக் காட்டுவதே விளக்கு. வீடுகள் பலவாறாக மேடை மேடையாக அமைந்திருப்பினும் விளக்கொன்று இல்லாவிட்டால் அவ்வீடு பார்க்கும் போது மனத்திடங் குலையும்படி அசனி போல் தோன்றும். சிறு குடிசையாயினும் ஒரு விளக்கேற்றி வைத்துவிட்டால் அப்பிராகாசத்தால் அவ்வீடும் அதிலுள்ளவர்களும், அங்குள்ள சகல பெயருள்களும் தன் தன் மேனிகளைப் பிரகாசிக்கச் செய்யும். விளக்கில் வீட்டு விளக்கென்றும் கோயில் விளக்கென்றும் இரு பிரிவுகள் உண்டு. வீட்டு விளக்கிலும் குத்து விளக்கு வழிபாட்டிற்கு ஏற்ற எழில் விளக்கு. அவைகளில் நிரம்பக் கலை அம்சம் பொருந்தியிருக்கும். விளக்கே இறைவனைக் காட்டும் வழிகாட்டி. விளக்கே இறைவன். மக்களிடத்திலுள்ள அறிவு ஒளியே விளக்கு. எனவே விளக்கு வழிபாடு அறிவைக் குறிக் கொண்டதாக அமைந்துள்ளது.

பண்டைத் தமிழர்கள் மலைச் சிகரங்களிலே விளகேற்றி விழாக் கொண்டாடி விருந்துண்டு களிகொண்டு ஆடி நிற்பர். இதற்குச் சங்க நூல்களிலே சான்றுகள் உண்டு.

''அலுமீன் பயந்த அறஞ்செய திங்கள் செல் சுடர் நெடுக்கொடி போல்'' என்று நற்றிணை கூறுகின்றது.

சிவாலயமொன்றில் நெய்யை உண்ணும் பொருட்டுச் சென்ற ஒரு எலியினது முகத்தில் மங்கலாக இருந்த தீபச்சுடர் சுடத் தட்டழிந்து தாவியோடிய போது அதனால் அசைவுற்ற விளக்கின் திரி பிரகாசித்தெரிந்தமையினால், அந்த எலி மறுபிறப்பில் அதிபராக்கிரமமுடைய மகாபலிச் சக்கரவர்த்தியாகப்பிறந்தது என்று கூறப்படுகின்றது.

மகாபலிச் சக்கரவர்த்தியும் கார்த்திகைத் தீப விழாவை அனுஷ்டித்துத் தன் உடம்பில் தோன்றிய வெப்ப உணர்ச்சியை போக்கிக் கொண்டார் என்பது மரபு. தேவி மகிஷா அசுரனுடன் போர் புரியும் போது தன்னை அறியாமலே ஒரு சிவலிங்கத்தை உடைத்துவிட்ட பாபத்தைப் போக்கிக் கொள்ளத் தேவியும் கார்த்திகை விழாவைக் கொண்டாடினாள் என்பர்.

த. காசிநாதன்
(சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)


## பிரயாண ஒழுங்குகள்

**GLORIA TRAVELS**

● சுவிட்சர்லாந்து
● ஜேர்மனி ● பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்

எமது பிரயாணமுகவர் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற்

ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

**GLORIA TRAVELS**

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.



## N P T A. Benevolent Fund

(Incorporated by Parliament Act No 18 of 1968)

வடமாகாண
ஆசிரியர் சங்க சகாயநிதி

**வெள்ளி விழா**

நேரம்: மு, ப. 9-30 காலம்: 16-11-86
ஞாயிற்றுக்கிழமை
இடம்: யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பிரதம விருந்தினர்:
**திரு. இரா. சுந்தரலிங்கம்**
கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்

தயவுசெய்து இந்த அழைப்பினை ஏற்று தவறாது சமுகமளிக்கும் வண்ணம் சகாயநிதி செயற்குழுவின் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்.

P. S. குமாரசுவாமி, தலைவர். இ. மகேந்திரன், கௌரவ செயலாளர்.
S. சிவசுப்பிரமணியசர்மா, பொருளாளர்.


# ஆசிரியர் சகாயநிதி சங்கத்தின் வளர்ச்சி

வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதியின் இருபத்தைந்து ஆண்டு கால சேவையின் நிறைவைக் குறிக்கும் முகமாக நாளை வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்தச் சகாயநிதியினை உறுதிவாய்ந்த ஒரு ஸ்தாபனமாக வளர்த்து வந்துள்ள உத்தியோகத்தர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், உறுப்பினர்கள் ஆகியோர் ஆற்றி வந்துள்ள நற்பணியை இவ்வேளையில் நினைவு கூர்வது அவசியமானதாகும்.

அவர்கள் காட்டிய வழியில் நின்று சேவை செய்து நிதியை மென்மேலும் வளர்த்து வர உறுதி பூண்டுள்ளோம்.

திரு. கே. வி. மயில்வாகனம் அவர்கள் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் தலைவராகக் கடமையேற்றிருந்த வேளையில், இந்த நிதியினை நிறுவவேண்டும் என்ற பிரேரணை அச்சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதைத் தொடர்ந்து 13-8-1960இல் நடைபெற்ற அங்குரார்ப்பணத்துடன் நிதி செயற்பட்டு வரலாயிற்று. நிதியின் முதல்வருடத் தலைவராக அன்றிருந்த வடமாகாண ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. ஏ.எஸ். கனகரெத்தினமும் திரு. ரி. விஸ்வநாதன் செயலாளராகவும், திரு. ஈ. கே. சண்முகநாதன் பொருளாளராகவும் பொறுப்பேற்று நிதியின் ஆரம்ப கால நடைமுறைகளை நிர்வாகசபையினரின் உதவியுடன் ஒருங்கமைத்துச் செயற்பட்டனர்.

முதலாவது ஆண்டில் 630 உறுப்பினர்களுடன் ஆரம்பித்தநிதியில்இன்று 927 உறுப்பினர் உள்ளனர்.

ரூபா 18.125ஐ முதல் வருடத்தில் உறுப்பினர் கட்டணமாகச் சங்கம் பெற்றது.

இன்று ரூபா 16.9 லட்சத்தை மொத்தமான சொத்தாகக் கொண்டு விளங்குகின்றது.

இதுகாலவரை 66 உறுப்பினரின் உரிமையாளர்களுக்கு மரண சகாயமும், 508 உறுப்பினர்களுக்கு இளைப்பாறுச் சகாயமும் இந்நிதியினால் வழங்கப்பட்டுள்ளன. மேற்கூறிய புள்ளி விபரங்கள் இந்நிதிஆற்றி வரும் சிறந்த சேவையை வெளிப்படுத்துகின்றன.

பி.எஸ். குமாரசுவாமி
(தலைவர், வடமாகாண ஆசிரியர்சங்க சகாயநிதி)

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது. (இது இலங்கை வங்கியின் 13 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்.)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 40. 45 |
| அமெ. டாலர் | 28. 30 |
| இந்திய ரூபா | 2. 16 |
| மார்க் ஜேர்மனி | 13. 86 |
| கனடா டாலர் | 20. 12 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 24 |
| பிராங் (சுவிஸ்) | 16. 58 |
| அவுஸ். டாலர் | 17. 96 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரியார் கலாநிதி ஆவதால் 'கலாநிதி'க்கே ஒரு பெருமை!

வைரவிழா, பொன்விழா, மணிவிழா எல்லாம் கண்டு இன்று முத்து விழாவில் அடி எடுத்து வைத்திருப்பவர் அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்' பொன், மணி, முத்து, வைப்பு

## தமிழை வாரி வாரி வழங்கும் செந்தமிழ்த் தவமுனிவர்

முறையை அப்பர் பெருமானே அருளிச் செய்துள்ளார்.

இப்பொன் நீ, இம்மணி நீ, இம்முத்து நீ, இறைவன் நீ, ஏறூர்ந்த செல்வன் நீயே!

முத்துவிழாக் காணும் இம்முத்தமிழ் வித்தகருக்குக் கலாநிதிப் பட்டம் கொடுப்பதற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முன்வந்துள்ளது.

கலாநிதிப்பட்டத்தால் மற்றவர் புகழ்பெறுவர். ஆனால் வாரியாருக்கு கலாநிதிப்பட்டம் கிடைப்பதால் கலாநிதிப் பட்டம் புகழ்பெறுகின்றது.

முன்னின்றோர் முதுகிய பின்னின்றோர் முண்டியடித்துக்கொண்டு சினிமாப்பார்க்க மக்கள் இருவர். அரசியல் தலைவர் பேசும் கூட்டத்தைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் சேர்வர் சினிமா நட்சத்திரங்களை நேரில் பார்க்கவென்றால் பதினாயிரக் கணக்கில் மக்கள் கூடுவர்.

சமயச் சொற்பொழிவுக்கு மக்கள் திரள் திரளாகக் கூடுவார்களா? அதுவும் மாணவர் மங்கையர் பெண்கள் என்று கூடுவார்கள்

முன்னெப்போதும் கூடியதாகத் தெரியவில்லை: பின்னும் கூடுவார்களென்பதுமில்லை கண்டதில்லை, கேட்டதில்லை என்றளவுக்கு இப்போது கிருபானந்தவாரியார் பேச்சைக்கேட்கக் கூடுகின்றார்கள்.

பக்தி, ஒழுக்கம் ஈகை, புலமை, நாவன்மை, உபகார சிந்தை; இத்தனை சிறப்புகளுக்கும் மொத்த உருவமாகத் திகழ்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் அவர்

தமது சொற்பொழிவுக்கு மக்களை ஆயிரக்கணக்கில் திரளச் செய்வதுடன் சொற்சுவை,

### புத்தொளி

பொருட்சுவை குன்றாது காட்டாறு போல் கடல் மடை திறந்ததுபோல், மணிக்கணக்காகக் கேட்டாலும் தெவிட்டாமல்

கோபுரம்கட்டிக் கலசம் வைத்துக் கும்பாபிஷேகம் செய்வதுபோல் பிரசங்கத்தை விரிவாக ஆரம்பித்து, மெல்லமெல்ல அனுபவச் செய்திகளையும், ஆழ்ந்த நுட்பங்களையும், உவமை நயங்களையும், நகைச்சுவைக் கதைகளையும் சேர்த்தும், கோர்த்தும் சுவைபடப் பேசுபவர் வாரியார்.

இனிக்க இனிக்கப் பேசுபவர். தெய்வமென்று அவரை இன்று கும்பிடு (7 ஆம் பக்கம் பார்க்க)

# சிவாஜிக்கு கலாநிதிப் பட்டம்: சினிமா உலகிற்கே சிறப்பு





அடுத்த மாதம் முதலாம் திகதி அண்ணமலைப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்க இருப்பவர்களில் திருமுருக கிருபானந்தவாரியாரும், நடிகர் திலகம் சிவாஜிகணேசனும் இருவர்.

அவர்கள் இருவரும் தமிழகத்தில் மட்டுமன்றி ஈழத்திலும் பல லட்சக்கணக்கான தமிழ் இதயங்களில் இடம் பிடித்தவர்கள். அவர்களைப் பற்றிய அருமை பெருமைகளை வாசகர்களுக்கு ஞாபகப் படுத்துவதன் மூலம் அவர்கள் இருவரையும் சஞ்சீவியும் பாராட்டுகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தின் விழுப்புரத்தில் 1928 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதி பெருமாள் கோயில் தெருவில் உள்ள ஒரு சிறு குடிசையில்—

பொ. சின்னையா மன்றாயர்—ராஜாமணி அம்மாள் தம்பதிகளின் நான்காவது மகனாகப் பிறந்தார் கணேசன்

கணேசனுக்கு நான்கு

## நடிப்பில் இணையில்லா நவரசத் திலகம் அவர்

சகோதரர்கள் மூன்று சகோதரிகள்

தந்தை சின்னையா மன்றாயர் காந்திஜியின் தலைமையிலும், காங்கிரஸ் இயக்கத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்

ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்த்து அவர் மறியல் போராட்டங்களில் முன்னணியில் நின்றார். சிறைச்சாலை அவருக்கு 'மாமியார்' வீடாயிற்று

இதனால் அவரின் குடும்பம் வறுமையில் வாடியது

அன்னையார் ராஜாமணி அம்மையாரும், மூத்த மகன் திருஞானசம்பந்தமூர்த்தியும் கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வந்தனர். கஷ்டத்தோடு கஷ்டமாக கணேசனையும் விழுப்புரம் ஆரம்பப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தனர்.

குழப்படிக்காரப் பையனான கணேசனுக்கு படிப்பு ஓடவில்லை மூன்றாம் வகுப்போடு படிப்பை நிறுத்திக் கொண்டார் கணேசன்.

அதன் பின்னர் அன்னையும் தன் மகன் ஏதாவது தொழிலைக் கற்றுக் கொள்ளட்டும் என்று தமக்குத் தெரிந்த ஒரு சொல்லர் பட்டறையில்

**மா. பேரின்பநாயகம்**

எடுபிடி வேலைக்குச் சேர்த்து விட்டார்.

எட்டு வயதுச் சிறுவனான கணேசனுக்கு அந்த வேலையும் ஒத்துவரவில்லை.

அந்தக் காலத்தில் கிராமங்களில் நடக்கும் நாடகங்கள், கூத்துக்களை அடிக்கடி பார்த்த அந்தச் சிறுவனுக்கு அதில் ஏதோ ஒருவித நாட்டம் ஏற்பட்டது.

* நாடக உலகில்

இதை அறிந்த அண்ணன், தம்பியை நாடகக் கம்பனி ஒன்றில் சேர்த்துவிட, ஊர் முழுவதும் தேடித் திரிந்து, இறுதியில் ஸ்ரீபாலகான சபா நாடகக் கம்பெனியில் சேர்த்துவிட்டார். அப்போது அவருக்கு வயது பத்து.

எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியில் கணேசன் எல்லாப் பயிற்சிகளையும் பெற்று கிருஷ்ணலீலா நாடகத்தில் நடித்து நடிகரானார். ஏற்றவேடம் பால கிருஷ்ணன்.

அதனைத் தொடர்ந்து அவரது நாடக உலக வாழ்வில் பலப்பல சோதனைகள் — வேதனைகள் வெற்றிகள் மாறி மாறி வந்துபோய்க் கொண்டிருந்தன.

1946 ஆம் ஆண்டில் அவரது நாடக வாழ்வில் புதிய சகாப்தம் (7ஆம் பக்கம் பார்க்க)




## அத்தியாயம் ஒன்று

எனக்கு ஏதோ தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தமாதிரி இருக்கிறது நடந்து முடிந்தவைகளெல்லாம்.

ஏதோ ஒரு கெட்ட கனவு போன்றதொரு பிரமை. ஒருவேளை இதெல்லாம் மனக்குழப்பமோ? அல்லது அம்மா இப்பொழுதெல்லாம் அடிக்கடி சொல்லிக்கொள்வதுபோல திடீரென்று எதிர்பாராமல் ஏற்பட்ட அதிர்ச்சியில் என் மூளை குழம்பிப்போய் விட்டதோ?... எனக்கென்னமோ எல்லாமே ஒரே விரக்தியாகத் தோன்றுவதுபோல இருக்கிறது.

இப்படித்தான் ஓரிடத்தில் தனிமையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்கச் சந்தர்ப்பம் கிடைத்தால் மனது கட்டுக்கடங்காமல் தறிகெட்டு ஓடி எதைஎதையோ சிந்தனை செய்ய ஆரம்பித்து விடுகிறதே. இவ்வளவு நாளும் இப்படிக் கொஞ்ச நேரம் ஓய்வாக ஓரிடத்தில் உட்கார்ந்திருக்க முடிந்ததா என்று நினைக்கும்போது ஒரு பக்கம் சிரிப்பும் அதே சமயம் மனதின் அடித்தளத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பும் துக்கத்தினால் இமையோரங்களில் கண்ணீரும் துளிர்க்கிறதே

சே!... இப்படியே சிரித்தும் அழுதும் கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் உண்மையில் இவளுக்குப் பைத்தியம் தான் பிடித்துவிட்டதென்று பேசிக் கொள்வார்களே, அதனால் என் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு கலகலப்பாக இருப்பதாக வெளிக்காவது காட்டிக் கொள்வோமென்றால் இந்த மனது அவசபோடுகிற மாடு மாதிரி திரும்பத் திரும்ப அதையே எண்ணி எண்ணி......

'அம்மா'...

சிந்தனைத்தொடர் அறுபட, குரல் வந்த திக்கை வெறித்து நோக்குகிறேன் கண்ணன், நான் பத்து மாதம் சுமந்து பெற்ற என் மகன் புழுதி படிந்த மேனியோடு என் முன்னே நிற்கிறான். அவன் நிற்கும் நிலையைப் பார்த்தால் தன்னோடு கூடி விளையாடிய சிறுவர்களில் யாரையோபற்றிப் புகார் செய்யத்தான் வந்திருக்கிறான் போலத் தோன்றுகிறது

'என்ன கண்ணு?' என்கிறேன். என் குரல் கிணற்றுக்குள் இருந்து வெளிவரும் சத்தமாக ஒலிக்கிறது

மோகன் என்னை மணலில் தள்ளி விழுத்தி விட்டானம்மா' என்கிறான் விம்மலுடன்.

இதெல்லாம் விளையாட்டுக்குத்தானே? சரி... சரி... அழாமல் போய் விளையாடு கண்ணு' என்கிறேன்

தயங்கித் தயங்கி நின்று விட்டு, ஏதோ சமாதானமடைந்தவனைப் போல் அவன் திரும்பி மாமரத்தடிக்கு ஓடி மற்றச் சிறுவர்களோடு சேர்ந்து கொள்கிறான்

அறுந்த என் சிந்தனைத் தொடரும் மீண்டும் தொடர்கிறது. இப்பொழுதெல்லாம் என் மகன் கண்ணனைக் காணும்போது என் மனதை ஏதோ ஒரு உணர்வு உறுத்துகிறது

இங்கு வந்த பிறகு ஒரு தாய்க்குரிய பாசம் அவன் மேல் செலுத்தவில்லையென்று என் மனச் சாட்சியே என்னைக் குற்றம் சாட்டுகிறது நான் என்ன செய்வேன்? தலையை லேசாக வலிப்பது போன்றதொரு பிரமை. மெல்லக் கைகளால் அழுத்திப் பிடித்துக் கொண்டே சுவரில் சாய்ந்து கொள்கிறேன் மதியம் சாய்ந்து விட்ட போதிலும் வெய்யிலின் ஆகோரம் இன்னும் குறைந்தபாடில்லை.

வீடு ஒரே மயான அமைதியில் ஆழ்ந்திருக்கின்றது. இதுவரை அடுப்படியில் வேலை செய்து அலுத்துக் களைத்த அம்மா திண்ணையில் சாய்ந்து படுத்து அயர்ந்து விட்டாள்.

அப்பா... ஓ... யாராலுமே புரிந்து கொள்ள முடியாத ஒரு விசித்திரப் பிறவி அவர். ஏதோ தற்செயலாக அம்மாவைக் கல்யாணம் செய்து, தெரியாத்தனமாகப் பிள்ளைகளைப் பெற்று விட்டதாக எண்ணி வருந்துவது போலிருக்கும் அவரது பேச்சும் செய்கைகளும். குடும்பத்தில் ஒட்டுறவில்லாமல் ஒரு சன்னியாசி போலத் தான் வாழ்ந்து வந்தார் அவர். ஏதோ மடத்துக்கு வருவதுபோல வருவார். சாப்பிடக் கூப்பிட்டால் வந்து சாப்பிடுவார். புறப்பட்டு வெளியே போனால் எப்போது மீண்டும் வருவாரோ, சொல்ல முடியாது. வருகிறபோது கண்டு கொள்ள வேண்டியது தான். இவ்வளவுக்கும் வீட்டுக்குறை, நிறை எதைப் பற்றியுமே அவர் அலட்டிக் கொள்வதில்லை.

அம்மாவுக்குக் கூட அப்பாவின் இந்தப் போக்கு பழகிப் போய் விட்டது. ஏதோ இருந்த அம்மாவின் பூர்வீகச் சொத்து அந்த ஒரு ஏக்கர் தென்னந் தோட்டத்தினால் வந்த வருவாயைக் கொண்டு அம்மாவே குடும்பத் தலைவனி என்னையும் தங்கச்சியையும் ஒருமாதிரி வளர்த்து ஆளாக்குகிற பணியில் வெற்றி கண்டார். என் சின்ன வயதில் வெளியே சென்ற அப்பா சாப்பாட்டுக்கு வருவார் என்று சாப்பாட்டுடன் காத்திருந்து காத்திருந்து ஏமாந்து கடைசியில் தானும் பட்டினியாகவே படுத்து விடுகின்ற அம்மாவைக் காணும்போதெல்லாம் சே... இவ்வளவு இதயமில்லாத ஜீவன்களா இந்த ஆண்கள் என்று என்னுள்ளேயே ஒரு வெறுப்பு ஏற்படுவதுண்டு.

"அந்த வீட்டில் இருக்கும் ஒவ்வொரு கணமும் அவரின் நினைவே மனதில் எழுந்து தடுமாற வைக்கிறது.
என்னோடு உரையாடுவதாக,
என்னைக் கேலி செய்து நகைப்பதாக
ஒரு பிரமை!

அந்தப் பிஞ்சு வயதில் அப்பாவின் செய்கைகளால் மனதில் அடி ஆழத்தில் முளை விட்ட அந்த வெறுப்பு மேலும் மேலும் அப்பாவின் அடாபிடித் தனங்களால் வளர்ந்து... சே... மனக் குதிரை தான் எப்படிக் கட்டவிழ்த்துப் பறக்கிறது.

இப்படித்தான் நான் பருவமடைந்த நாளிலிருந்து அம்மாவும் அப்பாவின் காதில் மகள் பெரியவளாகி விட்டாள் என்று அடிக்கொருதரம் கூறி வந்தாள் அப்பாவும் வழமையான 'ம்' கொட்டிக் கொண்டே காலத்தைக் கடத்தி வந்தார். இருந்தாற் போலிருந்தொருநாள் 'விசாலம், எங்கடை சாதியைப் பொம்பிளை பார்க்க நாளைக்குக் கனகசபையும் பெண்சாதியும் மோகனோடை வருகினமாம்' என்று அம்மாவிடம் கூறியபோது நானும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஏதோ மனதில் இனம் புரியாத இன்ப உணர்வு பரவி ஏதோவொரு கற்பனையில் மிதந்தேன்.

என்னைப் பெண் பார்க்க வரப்போகிறவர்கள் எவரையுமே எனக்குத் தெரியாத நிலையில் கூட, என்னைப் பெண் பார்க்கவிருக்கிற அவரின் தோற்றத்தைக் கற்பனையில் கற்பித்துப் பல இன்ப நினைவுகளில் மூழ்கி முக்குளித்தேன்.

ஆனாலும் ஏதோ ஆண்டவன் கிருபை என்பார்களே அதுவோ, இல்லை விதி என்பார்களே அதுவோ, ஏதோ ஒரு வகையில் எல்லாமே கைகூடி, என் கற்பனையில் நான் கண்டமாதிரியே, சில நாட்களில் அந்த 'அவரை'யே நான் திருமணம் செய்ய ஒழுங்குகள் ஆயின. பெரிய தடபுடல் என்றில்லாமல் சாதாரணமாக என் திருமணம் நடந்து முடிந்தது ஆனாலும் எவ்வளவோ ஆசைக் கனவுகளோடு புது வாழ்க்கையைத் தொடங்கிய நான் என் வாழ்க்கைப்படகு இவ்வளவு விரைவில் தடம் புரண்டு, புயலில் சிக்கி நதியில் மூழ்குமென்று கனவு கண் (7 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த முனைகளில் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்

உரோம, பாரசீக சாம்ராச்சியங்கள் உன்னத நிலையில் இருந்த கி. பி 6ம் நூற்றாண்டில், மனிதகுலம் வாழ முடியாது எனக் கணிக்கப்பட்டு, புறக்கணிக்கப் பட்டிருந்த அரேபியத் தீபகற்பத்தில் இஸ்லாத்தின் இறுதித் தூதராக இறைவனால் தெரிவு செய்யப்பட்ட முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பிறந்தார்கள். அவர்கள் பிறந்த இடம் மக்கா. அங்குதான் மிகப் பழமையான ஆலயமான "கஃபத்துல்லாஹ்" அமைந்திருந்தது.

**நாடோடிகள்**

அங்கு வாழ்ந்த மக்களில் அதிகமானோர் நாடோடிகளாக வாழ்ந்தார்கள் நாடோடி வாழ்க்கையானது,குலம், கோத்திரம், வர்க்கம், மொழி, நிறம், சமயம் ஆகியவற்றில் பேதங்களை உருவாக்கி மக்களிடையே தொடர்ச்சியான அமைதியின்மைக்கும், குழப்பங்களுக்கும், சண்டைகளுக்கும் வழி அமைந்திருந்தன. அவர்களது சமய நம்பிக்கைகளில் ஒற்றுமை பேணப்படவில்லை. நாடோடிக் குழுக்களிடையே சிலை வணக்கம் பரவியிருந்தது. கஃபத்துல்லாஹ்வில் முன்னூற்று அறுபதுக்கும்

**இன்று மீலாத்துன்னபி தினம்**

மேற்பட்ட விக்கிரகங்கள் காணப்பட்டன. அதிகாரத்தாலும், ஆணவத்தாலும் மனிதகுலம் பிரிவுபட்டுக் காணப்பட்டது.

மூஸா அலைஹிஸ்ஸலாம்,(மோஸஸ்),தாவூது அலைஹிஸ்ஸலாம் (தாவீது) ஈஸா அலைஹிஸ்ஸலாம் (இயேசு) ஆகியோரின் வழித்தோன்றலில், ஏக இறைவனாகிய அல்லாஹ்வின் இறுதித்தூதராக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் தெரிவு செய்யப்பட்டார்கள்.

மனித வர்க்கத்தை ஒரே அமைப்பில், ஒரே இலட்சியத்தில் ஒன்றுபடச் செய்வதில் முன்னைய தூதர்கள் மேற்கொண்ட பணிகளை விட, இறுதித் தூதராக விளங்கிய முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அதிக பணிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது அவ்வேலையினை நிறைவேற்றுவதற்கு அயராத முயற்சிகளும், மலைபோன்ற எதிர்ப்புக்களும், உயிருக்கு உலைவைப்பதற்கான பயமுறுத்தல்களும், கொடுமைகளும் ஏற்பட்டன.

**ஒன்றே தெய்வம்**

கி. பி. 610ல் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாத்

கே. எம். எச். காலிதீன் (எம். ஏ)
(தலைவர் அகில இலங்கை கதீப்மார்கள் சம்மேளனம்)

துக்கு மக்களை அழைப்பதற்கான பிரசாரம், மக்கா நகரில் பதின் மூன்று ஆண்டுகள் இடம் பெற்றது. ஆதரவை விட எதிர்ப்புக்களே அதிகம் இருந்தது. பல தெய்வ வணக்கமுடைய, [illegible] படுத்தி மனித கத்தை ஒன்றுபடச் செய்வதற்கு மேற் கொண்ட முயற்சிகள் பாரிய வெற்றியை அளிக்கவில்லை.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்கள் பல வகையிலும் எதிரிகளால் துன்புறுத்தப்பட்டனர். இறுதியாக இஸ்லாத்தை ஏற்றவர்கள் மக்காவிலிருந்து முன்னூறு மைல்களுக்கு அப்பாலுள்ள மதினாவுக்கு அனுப்பப்பட்டனர். இறுதியாக நபியவர்களும் எதிரிகளின் [illegible] முறுத்தல்களுக்கு மத்தி[illegible] ஆணைப் படி மதினாவுக்குச் சென்றனர்.

இதனை "ஹிஜ்ரா" என அழைக்கப்படுகிறது.

மதினா நகருக்குச் சென்ற பின்னரும், மக்காவில் எதிரிகளாக விளங்கிய குறைஷியர்கள் விட்டு வைக்கவில்லை. இஸ்லாத்தை அழிப்பதற்கும், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கொலை செய்வதற்கும் திட்டமிட்டு மதினாமீது படையெடுத்தார்கள்.

கி பி 623ல் முதல் படையெடுப்பு இடம் பெற்றது. இதனை "பத்ரு" யுத்தம் என இஸ்லாமிய வரலாறு குறிப்பிடுகின்றது. இந்த யுத்தத்தில் முஸ்லிம்கள் நபியின் தலைமையில் மதினாவுக்கு அண்மையிலுள்ள "பதுரு என்னும் மலை அடிவாரத்தில் எதிரிகளைச் சந்தித்தார்கள்.

முஸ்லிம் படைவீரர்கள் மிகவும் குறைவாகவும், எதிரிகளின் படைவீரர்கள் ஏழுமடங்கு அதிகமாகவும் இருந்தனர். எதிரிகளிடம் போதிய ஆயுதங்களும் படைபலமும் இருந்தன. முஸ்லிம்களிடம் இறை நம்பிக்கையே இருந்தது. இந்த யுத்தத்தில் முஸ்லிம்களுக்கு அமோக வெற்றி கிடைத்தது. எதிரிகளின் பக்கத்தில் எழுபது நபர்கள் கொலை செய்யப்பட்டும், எழுபது நபர்கள் முஸ்லிம்களால் சிறை பிடிக்கவும் பட்டார்கள். முஸ்லிம்களின் இறை நம்பிக்கையின் காரணமாக அல்லாஹ்வின் அமரர்கள் அவர்களுக்கு உதவியளித்து இவ்வெற்றியை ஏற்படுத்தியதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

சிறை பிடிக்கப்பட்டோரில் பலர் விடுதலை செய்யப்பட்டனர். சிலர் சிறுவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கு பணிக்கப்பட்டார்கள். ஒருவருக்கும் மரண தண்டனை அளிக்கப்படவில்லை.

**எடுத்துக்காட்டு**

இஸ்லாத்தின் யுத்த முறைமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். இதை முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே முன்னின்று நடத்தி முன்மாதிரியான வெற்றியை ஏற்படுத்திக் காட்டினார்கள். இரண்டாவது யுத்தம் 'உஹது' யுத்தம் என அழைக்கப்படுகிறது.

முதலாவது யுத்தத்தில் தோல்வியடைந்த மக்கா குறைஷியர்கள், மீண்டும் மதினா மீது படையெடுத்தார்கள். இது பெரும் படையெடுப்பாக இருந்தது. மதினாவுக்கு மூன்று மைல்கள் தொலைவிலுள்ள 'உஹது' என்னும் மலையடிவாரத்தில் இது நடைபெற்றது.

நபியவர்கள் படையணிகளை நிரைப்படுத்தி ஒவ்வொரு தலைவருக்கும் தமது இடங்களிலிருந்து வேறு இடங்களுக்குச் செல்லக்கூடாது என உத்தரவிட்டார்கள். யுத்தம் நடைபெற்று எதிரிகள் தோல்வியடைகிறார்கள் எனக் கண்ட முஸ்லிம் படைவீரர்கள் நபியவர்களின் கட்டளையை மீறி பல இடங் (7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமரர்கள் அரிதாமே!

இறந்தவர் யாவரும் அமரர்க ளென்றே
எழுதி எழுதியே அனுப்புகின்றீர்
நிறைந்தது நிறைந்தது அமரருலகம்
நிற்கவோ இருக்கவோ இடமில்லையங்கு

மறைந்தவர் தம்மை மாதவ ரென்றே
மறைமுக மாயே அனுப்புகின்றீர்
சிறந்தவர் குறைந்தவர் யாரென்று அறியா(து)
திகைக்கின் றோமே தேவர்கள் யாம் — என்று

இந்திரன் வந்தே இக்குறை பாட்டை
இன்னற் பட்டே இயம்புகிறான்
அந்தரப் பட்டே அலம்பிய எங்களின்
அவசரப் போக்கையும் கண்டிக்கிறான்.

கள்வன் கபடன் கயவன் காமுகன்
கண்ணிய மற்றவன் புண்ணியனே?
குள்ளன் கொலைஞன் கொடியவன் குடியன்
கூட விருந்தே குடைந்திடுவோன்

முள்ளன் முடிச்சன் முரடன் மூர்க்கன்
முத்திப் பேறுக் குகந்தவரோ?
உள்ளன் பற்றவன் உலுத்தன் ஊழலன்
உருட்டுப் புரட்டுளன் உண்மையனோ?

என்றே கேட்டு எச்சரிக் கின்றான்
இந்திர னென்னும் இமயவர்கோன்
நன்றல வென்றே நாமும் அறிவோம்
நச்சரிப் பதனால் நலிகின்றோம்.

பிறந்தவர் அனைவரும் அமரரே யென்று
பெருமையாய்ப் பேசிட வேண்டுமெனில்
பிறந்தவர் உடனுடன் இறந்திடு வாரேல்
பிழையின்றிப் பேசலாம் அமரரென்றே.

பிறந்தவர் வளர்ந்தே பெரியவ ராயின்
பிசகுகள் பிணைந்தே பின்னிழுக்கும்
அறிந்தவர் அறிந்தே ஆராய்ந் தெழுதின்
அமரர்கள் அரிதினும் அரிதாமே!

விடுதலை வேண்டிப் படிதனில் உயிர்தனை
விடுபவர் வீடுறை வீரர்களே!
படிதனில் சுதந்திரப்பாதைபடைப்பவர்
பரம பதத்தினில் பரந்தவரே!

கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

# சிவம் என்ருல் உண்மை:

# தனி மதத்தின் சொத்து அல்ல

விவிலிய நூலின்படி முதலில் கடவுள் படைத்தது ஒளியையேயாகும். அதன் பின்னரே மற்ற உருவங்கள் படைக்கப் பட்டன. ஒளியைப் படைக்காமல் பிரபஞ்சத்தை இறைவனால் படைக்க முடியவில்லை. உண்மை என்ற ஒன்றே முதலில் இப்பிரபஞ்சத்தில் இருந்திருக்க வேண்டும். வேறு ஒன்றுமில்லாத இப்பிரபஞ்சத்தில் உண்மையால் எவ்வாறு

### சிந்தனை விருந்து

ஒளியைப் படைத்திருக்க முடிந்தது என்ற வினா எம்முள் எழவே செய்யும்.

தன்னிலிருந்து ஒளியைப் படைக்காமல் வேறு எவ்வழிலல் உண்மையால் ஒளியைப் படைத்திருக்க முடியுமெனவும் எம்முள் சந்தேகம் எழுவது இயற்கையே சிலந்தி தனதுடலில் இருந்தே கூடுகட்டுவது போலவே உண்மையும் தன்னுள் இருந்தே ஒளியையும் படைத்திருக்க வேண்டும். இதிலிருந்து ஒளியானது உண்மையிலிருந்தும் பிரித்துப்பார்க்க முடியாத ஒன்று என்று எமக்குத் தெரிகின்றது.

சுருங்கக் கூறின் ஒளியே உண்மை — கடவுள். உபநிடதத்திலும் (Upanishad) விவிலிய நூலில் வரும் இக்கூற்று காணப்படுகின்றது. பிரம்மா ஆகிய படைத்தவன் (Creator) முதலில் ஒளியை உண்டாக்கிய பின்னரே அந்த ஒளியிலிருந்து ஏனைய உருவங்களைப் படைத்தான் என்கின்றது உபநிடதம். பபிலோனியாவிலுள்ள கல்வெட்டுகளும் இதனையே கூறுகின்றன ஆதி கால மனிதன், ஏன் இன்றும் கூட மனிதன் சூரியனைத் தனது ஊனக் கண்ணுக்குத் தெரியாத கடவுளின் பிரதிநிதியாக வணங்கியதற்கும்,

வணங்குவதற்கும் இதுவே காரணமாகும். புத்தர் ஞானம் பெற்றார் என்பதை ஆங்கிலத்தில் 'Enlightenment' பெற்ருர் என்றே அழைக்கின்றோம் என்பது ஈண்டு நோக்கத்தக்கது. இருளகல்வதை, ஒளியூட்டுவதை ஐயந்தெளிந்ததை, தப்பெண்ணத்தை அகற்றுவதை மூடநம்பிக்கையிலிருந்து விடுபடுதலை எல்லாம் ஆங்கிலத்தில் இச்சொல்லாலேயே குறிப்பிடுகின்றோம்

### ஒளியின் செறிவு

அண்மைக் கால விஞ்ஞான ஆராய்ச்சியும் எல்லாத் திண்மப் பொருள்களும் ஒளிவீசும் சக்தியின் — ஒளியின் செறிவே என்று உறுதியாகக் கூறுகின்றனர். ஆய்வுகூடத்தில் ஒளியை திண்மப் பொருளாகவும் அதே திண்மப்பொருளை மீண்டும் ஒளியாகவும் மாற்றலாம். பொருள்கள் யாவும் அணுக்களா

லானவை. அணுவைப் பிரிக்கமுடியாது — கூறு போட முடியாது என்று முன்பு நினைத்த விஞ்ஞானிகள் இன்று அதனைப் பிளக்கலாமெனவும் (Atomic Fission) அதற்குள் காணப்படும் இலத்திரனானது (Electron) ஒரு கோளப்பாதையில் (Orbit) அதிவேகத்தில் சுழன்றுகொண்டிருக்கின்றதென்றும் அந்த இலத்திரன்களின் வேகச் சுழற்சியினால் எழுகின்ற சக்தியினாலேயே யாம் உலகிலுள்ள பொருள்களை

### அக ஒளி ||

எமது ஊனக்கண்களால் காணக் கூடியதாகவிருக்கின்றது என்றும் உறுதியாகவும் முடிவாகவும் கூறுகின்றனர்

இந்த இலத்திரன்களின் இயக்கங்கள் நிறுத்தப்பட்டால் நாம் காணும் பொருள்கள் யாவும் இருந்த இடந் தெரியாது மறைந்து போய்விடும் என்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

கந்தையா நவரேந்திரன்

# ஞான சஞ்சீவி

### பஞ்சஅக்ஷரம்

பிரம்மாண்டமான விசை இயக்கத்தைக் கொண்டது இப்பிரபஞ்சம் எமது கற்பனைக் கடங்காத இதன் செயற்பாடுகள் நேர்விசை-எதிர்விசை (பொசிற்றிவ்-நெகற்றிவ்) சக்திகளின் ஒன்று சேர்க்கையின் அடிப்படையில் நிகழ்கின்றன. இச்சேர்க்கையைத் தான் சிவ-சக்தி தத்துவம் எனப்படுகிறது.

பஞ்ச பூதங்கள் எனப்படும் மூலமுதலான தத்துவப் பொருள்களாகிய பிருதுவி (மண்) அப்பு (நீர்) தேயு (நெருப்பு) வாயு (காற்று) ஆகாசம் (ஈதர்) என்பன பிரபஞ்சத்தின் செயற்பாடுகளுக்கு மூல ஆதாரங்களாகவுள்ளன.

நமசிவாய என்ற ஐந்து எழுத்துக்களும் பஞ்ச பூதங்களைக் குறிக்கும் 'ஓம்' என்ற நாதம் தோன்றிய பின்னரே பஞ்ச பூதங்கள் தோன்றின. எனவே, பஞ்சஅக்ஷரத்துக்கு முன்னோடியான மூல மந்திரம் ஓங்கார பிரணவ மந்திரமாகும்

பஞ்சாக்ஷரத்தில் இருந்து 51 தெய்வீக அக்ஷரங்கள் மலர்ச்சி பெற்றனவென்றும், அதன் அபார சக்தியிலிருந்து 96 தத்துவங்கள் பரிணமித்தனவென்றும் கூறப்படுகின்றன. இவைகளே மனிதபிண்டத்தையும், அண்ட சராசரத்தையும் அதனுள் அடங்கிய ஜீவராசிகளையும் இயக்குவதற்கு ஆதாரங்களாகவுள்ளன.

பஞ்ச பூதங்களுக்கு அதிபதிகளாக ஐந்து தெய்வாம்சங்கள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான வடிவியல் உருவங்களும், பீஜ மந்திரங்களும், நிறங்களும்

அ- குமரகுரு

உண்டு என வேதங்கள் கூறுகின்றன.

ந என்ற எழுத்து பிரிவிதியைக் குறிக்கிறது. இதன் வடிவியல் உருவம் சதுரம். பீஜ மந்திரம் 'லம்' நிறம் தங்க நிறமான மஞ்சள் இதற்கு அதிபதியான தெய்வாம்சம் பிரம்மா, பிரம்மாவின் தொழில் படைத்தல்.

ம என்ற எழுத்து அப்பு (நீர்) வைக்குறிக்கிறது. இதன் வடிவியல் உருவம் வளர் பிறை. பீஜ மந்திரம் 'வம்' நிறம் வெள்ளை இதற்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

# பறங்கித் தளபதியை வெட்டி வீழ்த்தி

# சங்கிலி மன்னன் வெற்றி வாகை!

டுமீல்! டுமீல்! டுமீல் டுமீல்...

ஏலவே துப்பாக்கிகளுக்கு வெடிமருந்து நிரப்பி வைத்திருந்த பறங்கிப்படை அடிக்கடி வேட்டுகளைத் தீர்க்கிறது. பறங்கியரின் துப்பாக்கி வேட்டுகள் பதம் பார்க்காதவாறு தூரத்தே நிலைகொண்டிருக்கும் நல்லூர்ச்சேனை சேனாதிபதியின் கட்டளையை எதிர்பார்த்து ஆயத்தமாகவிருக்கிறது. போர்க்களம் நுழைந்த காவற்படைத்தளபதி பராந்தகன் மன்னனை வாழ்த்தி வணங்கிவிட்டு வடதிசையாய் சென்று நிற்கிறான்

மன்னன்: தளபதியாரே! நாம் நெருங்கியதும் பறங்கியரின் துப்பாக்கியணி மெதுவாக அப்பால் நழுவி விடும்! அதன் பின்னர் பறங்கியரின் வாள்படை எங்களைத் துப் பின்னேறும்போது துப்பாக்கிப் பறங்கியர் மீண்டும் வெடிகளைத் தீர்க்கத் தொடங்குவர் அதற்கு சற்றுமுன் புதிய யுக்தியை கையாள வேண்டும்!

தளபதி: வேந்தே அந்தத்திட்டம் தயார்... அதோ... (தளபதி காட்டிய திசையை நோக்கிய மன்னன் அங்கே பத்துப் போர்வீரர்கள் குதிரைகளில் அணியாக நின்று கொண்டிருப்பதைக் காண்கிறான்)

டுமீல்! டுமீல்! டுமீல்! டுமீல்......

பறங்கியர் வேட்டுகளைத் தீர்க்கிறார்களே தவிர முன்னேறி வருவதைக் காணோம்

தளபதி: வேந்தே! இன்று பறங்கியர் புதிய தந்திரத்தைக் கையாளுகிறார்கள் போல் தெரிகிறது வழமையாக நாம் முன்னேறாவிட்டால் அவர்கள் முன்னேறி வருவார்கள். இன்று நாம் முன்னேறாத நிலையிலும் அவர்களும் அப்படியே நின்று சும்மா வேட்டுகளைத் தீர்க்கிறார்களே?

மன்னன்: இப்படியே வேட்டுகளைத் தீர்த்துக் கொண்டு நமது மண்ணில் ஆயுசு பூராவும் குந்தியிருக்கலாமென நினைக்கிறார்கள் முட்டாள் பறங்கிகள்!

தளபதி: வேந்தே! அப்படியானால் நாம் முன்னேறுவோம்...

மன்னன்: தாமதமேன்? அப்படியே ஆகட்டும்!

தளபதி வீரமாணிக்க தேவன் நல்லூர்ச் சேனையை முன்னேறுமாறு கட்டளையிடுகிறான். தமிழர் சேனை தரையோடு தரையாக பதுங்கிப் பதுங்கி முன்னேறுகிறது

பறங்கியர் வேட்டுகளைத் தீர்க்கத் தீர்க்க தமிழர்சேனை முன்னேறிக் கொண்டேயிருக்கிறது.

பறங்கிப் படையை நெருங்க நெருங்க துப்பாக்கி வேட்டுகள் நல்லூர் சேனைக்கு உயிர்ச் சேதத்தை உண்டு பண்ணுகிறது.

உயிரிழப்புகளுடனும் சிரமத்துடன் பறங்கிப் படையை அண்மித்து விட்ட நல்லூர் சேனையிடம் 'எய்' என்று கட்டளையிடுகிறான் தளபதி வீரமாணிக்கதேவன். அவ்வளவுதான்...... கொடும் மழை பெய்வது போல் அம்புகள் பொழியப்படுகின்றன! கவண் கற்கள் விண்கூவிப் பறக்க ஈட்டிகள் பரவிப் பாய்கின்றன இதனால் நிலை

ம. க. அ. அந்தனிசில்

மாணிக்கதேவன்! பொங்கு மாங்கடல் போல் பொங்கிப் பாய்கிறான் காவற்படைத் தளபதி பராந்தகன்! மூன்று மாகிறது.

இவ்வேளை..... தளபதி வீரமாணிக்கதேவன் தென்திசைப்பக்கம் குதிரையில் நிற்கும் வீரர்

### நந்திக் கொடி ஏந்தியவாறு நல்லூர்ச் சேனை போரிசையுடன் மண்கோட்டைக்கு விரைந்தது

களுக்கு சைகை காண்பிக்கிறான். அதைத் தொடர்ந்து கண் சிமிட்டும் பொழுதில் வாயு வேகத்தில் வந்த பத்து வீரர்களும் துப்பாக்கியணியை நெருங்கிப் பாய்ந்து சுற்றி வளைத்து பம்பரம் போல் சுழன்றாடி சுருள் வாள்களை சுழற்றுகின்றனர். இதனைக் கனவிலும் எதிர்பாராத துப்பாக்கிப் பறங்கியர் குறி பார்க்க வகையில்லாமல் சித்தம் கலங்கி நிலைகெட்டுத் தறிகெட்டு அங்குமிங்கும் ஓட எத்தனிக்கையில் சுருள் வாள்களின் நாக்கு நீண்டு நீண்டு அவர்களைச் சீண்டத் தொடங்குகிறது. இதன் நிமித்தம் சிக்கித் திணறிய துப்பாக்கிப் பறங்கியர் வேறு வழியின்றி துப்பாக்கிகளைக் கீழே போட்டு விட்டுத் தம் உறைவாள்களை எடுத்து வாட்போரில் இறங்கவே சுருள்வாள் வீரர்களும் வாட்போரில் குதிக்கின்றனர்.

இப்போது மடை திறந்த வெள்ளம் போல் தமிழர் சேனை பறங்கிப் படை முழுவதையும் ஊடுருவிக்கொள்ள இருதரத்தாரும் மலையும் மலையும் மோதுவதுபோல் சமராடுகின்றனர். மண் புழுதி மேலே கிளம்பிப் புகையாய் பரவுகிறது... மேலும் ஒரு நாழிகை ஓடிக்கழியுமுன்னர் பல

சூழம்பி, குறிபார்த்து வெடி தீர்க்க முடியாத பறங்கியரின் துப்பாக்கியணி திடீரென நழுவி தூரத்தே சென்று நிலைகொள்ள, பின்னணியிலிருந்து பறங்கியணி முன்னணிக்கு வந்து வாட்போரில் இறங்குகிறது.

நல்லூர்ச் சேனைக்கும் பறங்கி அணிக்கும் உக்கிரமான வாட்போர் நிகழ்கிறது. சமர்க்களத்தில் சண்டமாருதமெனச் சமராடுகிறான் சங்கிலி மன்னன்! இடிமுழக்கம் போல் பொருதி நிற்கிறான் தளபதி வீர நாழிகை தொடர்ந்த மூச்சான வாட் போரில் பறங்கியருக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஆரம்பித்து விடுகிறது... களைப்புக்கொண்ட அவர்கள் வழமையான குள்ள நரித்தந்திரத்துடன் தம் வாள்களைச் சுழற்றியவாறே துப்பாக்கி அணியின் பக்கமாகப் பின் வாங்க ஆரம்பிக்கின்றனர்.

இது கண்டு தூரத்தே நிற்கும் துப்பாக்கி அணி நல்லூர்ச்சேனை மீது மீண்டும் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்க்க ஆயத்த

### பறங்கியரின் களிமண் கோட்டை மீது பகைகொண்டு மோதிய நல்லூர்அரசு (பகுதி பத்து 'ஆ')

பறங்கியர் வெட்டிச் சாய்க்கப்படுகின்றனர். பறங்கித் தளபதி அன்ரு பூர்த்தாட் சங்கிலி மன்னனிடம் வகையாக மாட்டிக் கொள்கிறான். ஆயினும் மமதை தலைக்கேறியோனாய் மன்னனுடன் சமதையாக நின்று போர் புரிவதாகவும் காட்டிக் கொள்கிறான். ஆனால் மன்னனின் வீரத்தின் முன் இந்த வல்லூறு எம்மாத்திரம்? உக்கிரமாக விசப்பட்ட அவனது வாளை நுணுக்கமான உத்திமூலம் தட்டிவிட்ட சங்கிலி மன்னன் 'விசுக் விசுக்' என்ற தன் வாள் சுழற்றலிலே பறங்கித் தளபதியை வெட்டிச் சாய்க்கிறான் வீழ்ந்தான் பறங்கித் தளபதி! பறங்கித் தளபதி நிலத்தில் வீழ்ந்ததைக் கண்ட ஏனைய பறங்கியர் கடைசி நம்பிக்கையுமிழந்து மேற்குத் திசையால் பின் வாங்கி ஓடுகின்றனர்... 'எங்கே ஓடுகிறீர்கள்... மண்கோட்டைக்குத் தானே' என்று கர்ஜிக்கிறான் மன்னன் நல்லூர்ச்சேனை ஆரவாரம் புரிகிறது. போர் முழக்கம் உச்சத்தொனியில் ஒலித்து எதிரொலிக்கிறது

பறங்கித் தளபதி தோற்று வீழ்ந்ததை யிட்டு மன்னனைப் போற்றி வாழ்த்திய சேனைத்தளபதி வீரமாணிக்கதேவனிடம் 'இனி நாம் மண்கோட்டைக்குச் செல்வோம்' என்கிறான் மன்னன். அப்போது உச்சிவேளையாதலால் வீரமாகாளி அம்மன் கோயிலில் பகல்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

சைவாசிரிய கலாசாலையில் நீண்ட காலமாகப் பேராசிரியர்களாக அலங்கரித்து ஒளியூட்டியவர்களுள் நான்காமவரான சிவத்திரு நடராசா ஐயர் கந்தசுவாமி ஐயர் நல்லியல்புகள் வாய்ந்த நான்மறையாளர் குழந்தை உள்ளமும் குதூகலமான பேச்சும் புன்சிரிப்பும் தவள மலர்ந்த முகத்தோடு கலகலப்பாகப் பேசி தோழமை நெறியில் பாலர் கல்வி, பூமிசாத்திரம், வரைதல் முதலிய துறைகளுக்குப் பொறுப்பாளராயிருந்தவர் அவர்.

வேகமாகச் சைக்கிள் ஓடக்கூடியவரான அவர், பயிற்சியாளர் தூரவிடங்களிலுள்ள சாதனை பாடசாலைகளில் படிப்பித்துப் பழகிய வேலைகளின் சிரமத்தைப்பாராமல் மேற்பார்வை செய்வதற்கு ஓடித்திரிபவர் எவ்வித கண்டனக்குறியும் காட்டாமல் உற்சாகமான முறையில் ஊக்குவித்துப் பாடம் படிப்பிக்கப்பழகியவர்.

### தமிழில் பாலர் கல்வி

பாலர் கல்வி முறையில் அன்று வழக்கிலிருந்த மொன்ரி சோரி முறை, புரோபல் முறை, பெஸ்ரலோஜி முறை, டால்ரன் முறை முதலியவற்றை ஆங்கில நூல்களில் கருத்தூன்றிக் கற்று, நல்ல தமிழில் மொழிபெயர்த்துக் குறிப்புகள் சொல்வதில் சிவத்திரு ஐயரவர்கள் நிபுணர்.

பூமி சாத்திரக் கல்வியை நல்லமுறையாகக் கற்பித்ததோடு அட்சதேசாந்தரம் முதலியவற்றையும், புவியியலோடு தொடர்புபட்டவான மண்டலவியலையும் நன்கு விளக்கியவர் வானமண்டலத்தை விளக்குவதற்கு இரவிரவா மாணுக்கரின் விடுதிக்கு வந்து அவர்களை வெளியில் மைதானத்தில் நிற்கவைத்து, அவர்கள் மேலே நோக்க, நட்சத்திர மண்டலங்களை விளக்கியதோடு அவற்றின் பாரதப்பாரம் பரியப் பெயர்களையும் விளங்கவைத்தவர்

### வானமண்டல நிபுணர்

வானமண்டல நுணுக்கமெல்லாம் பிறப்புரிமை

### நான்காம் பெரியவரான நான்மறையாளர்

நெறியாள்கையால் அவருக்குக் கைவந்த கலையாயிற்று. முன்னர் ஆராலியில் வாழ்ந்து முதன்முதலாகப் பஞ்சாங்கங் கணித்துக் கையெழுத்துப் பிரதிகளாக வெளியிட்ட அந்தணர்களுள் தென்மாராட்சியைப் புக்ககமாகக் கொண்டு சரசாலையில் வாழ்ந்த ஒருசிலருள், நடராசா ஐயர் அவர்களின் இரண்டாம் மைந்தனை 1907 ஆம் ஆண்டில் தோன்றிய கந்தசுவாமி ஐயர் அவர்கள், ஐந்தாம் வயதில் வித்தியாரம்பஞ் செய்யப் பெற்று, அயலில் முறையாகப் படிப்பதற்குப் பாடசாலைகளில்லாமையால் வீட்டில் பெரியவர்களிடம் மூன்றாண்டுகள் கற்றபின், தூரத்திலிருந்த ஒரு கிறிஸ்தவ பாடசாலையில் சிலமாதங்கள் கற்றபோது. தந்தையார் மறைந்தமையால், தமையனார் தம்பியார் உளராதல் வேண்டும் என்று வைத்த பெருங்கருணையால் அவரைத் தமது புக்ககமாய கொழும்புத்துறைக்கு அழைத்துச்சென்று அங்குள்ள சைவப் பாடசாலையில் படிக்கவைத்தார்.

அங்கே ஐந்தாம் வகுப்பிற் சித்திபெற்றபின், ஆறும் வகுப்பிற் படிப்பதற்கு அக்காலத்துச் சூழ்நிலையில் சைவப்பாடசாலைகளில் இடமில்லாது போயிற்று கிறிஸ்தவர்களின் செல்வாக்கிலா[illegible] ஐந்தாம் வகுப்போடு [illegible] பட்டிருந்தன

ஆனால் நாவலர் அவர்களின் செல்வாக்கும் சேர் இராமநாதன் அவர்களின் ஆளுமையும் காரணமாக வண்ணார் பண்ணை நாவலர் பாடசாலை மாத்திரம் விதிவிலக்காக ஆறும் ஏழாம் எட்டாம் வகுப்புகள் நடத்திவந்தது. இந்தசைவ வரப்பிரசாத வாய்ப்பைச் சாதகமாகக்கொண்ட கந்தசுவாமி ஐயரவர்கள் அங்கே சென்று படித்து எட்டாம் வகுப்பில் திறமையுடன் சித்தியெய்தினார்.

எட்டாம் வகுப்பிற் சித்தியெய்தியவர்கள் அக்காலத்தில் ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சைக்கு எழுதலாம் என்னும் வசதியிருக்கவே, இவர் இருபாலையில் நடைபெற்ற பிரவேச வகுப்பிற் சேர்ந்து [illegible] தில், பரீட்சை எடுப்பதற்கான

(6 ஆம் பக்கம் பார்க்க)

● க. சி. குலரத்தினம் ●

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

### உலகம் முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆளும் கொள்கை

இந்தக் கடிதங்கள் உனக்கு களைப்பையும் குழப்பத்தையும் உண்டாக்கும் என அஞ்சுகிறேன். முக்கியமாக ரோம சாம்ராஜ்ஜியத்தைப் பற்றிக் கூறும் இதற்கு முந்திய இரண்டு கடிதங்களும் உன் பொறுமையை சோதித்திருக்கும் என்று நினைக்கிறேன்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் ஒன்றுக்கொன்று ஆயிரக்கணக்கான மைல் தூரத்தில் இருக்கும் பல இடங்களில் நிகழ்ந்த வரலாறுகளை முன்னும் பின்னு

### நேருவிடம் இருந்து இந்திராவுக்கு பகுதி-1

மாக சொல்லி உன் மூளையைக் குழப்பி விட்டேன்.

ஆனால் இதற்காக நீ கவலைப்பட வேண்டாம். பேசாமல் படித்துக் கொண்டு போ. எங்காவது நான் சொல்லுவது புரியாவிட்டாலும் அதற்காக விசாரப்படாமல் படித்துக் கொண்டே போ

உனக்கு சரித்திரத்தை முறையாகப் போதிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் நான் இக்கடிதங்களை எழுதவில்லை அங்கங்கே வரும் சரித்திரக் காட்சிகளை காட்டி உன் ஆவலையும் ஆசையையும் தூண்டுவதற்கே இவைகளை எழுதி வருகிறேன்.

ரோம சாம்ராஜ்ஜியங்களைப் பற்றிய வரலாறுகள் உனக்கு அலுப்பைத் தந்திருக்கும் என நினைக்கிறேன். எனக்கென்னமோ அவை அலுப்பைத் தருகின்றன ஆனால் இன்று மட்டும் அவைகளைப்பற்றி இன்னும் சிறிது தெரிந்து கொண்டு சில காலம் வரையில் அவைகளிடமிருந்து விடை பெற்றுக் கொள்வோம்.

தேசியம், தேசபக்தி என்றெல்லாம் இந்நாளில் பெரிதும் பேசப்படுவது உனக்குத் தெரியும். அதாவது ஒருவன் தான் பிறந்த நாட்டின் மீது அன்பு செலுத்துவது இந்தியாவில் நம்மில் பெரும்பாலோர் இன்று தீவிர தேசியவாதிகளாக இருக்கிறோம்

இந்தத் தேசியமானது சரித்திரத்தில் ஒரு புதிய விசயம், அது எவ்வாறு பிறந்து வளர்ந்ததென்பதை இக்கடிதத்தில் நாம் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

ரோம சாம்ராஜ்ஜியங்கள் தழைத்தோங்கிய காலத்தில் இத்தகைய தேசியவுணர்ச்சியென்பதே யாருக்கும் இல்லை. சாம்ராஜ்ஜியம் என்பது உலகத்தை ஆளும் ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடம் பயில்வோம் - பாடம் பயில்வோம் - பாடம் பயில்வோம்

## க. பொ. த. ப. (சாதாரணம்) மாதிரி வினாக்கள்

(அ) பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. ஆதிகால மனிதன் குகையில் வாழ்ந்தான். குகை என்ற பொருள் தரும் பிறிதோர் சொல் (இருள், அகம், முழைஞ்சி, அகழ்)

2. நாடகமகளிர் ஓவியப் புலமை பெற்றனர். புலமை என்பது (ஆட்சி, தெளிவு, காட்சி, அறிவு)

3. ஆன்மீக வாழ்வு வாழ்பவர் தெய்வ அருள் பெறுவர். ஆன்மீக வாழ்வு என்றால் (உலக வாழ்வு, அருள் வாழ்வு, நிலையின்மை, செல்வ வாழ்வு) எனப் பொருள் படும்.

4. மக்கள் வாழ்வு செல்வத்துடன் கல்வியும் சேர்ந்து வளம்பெற்றது. வளம் பெற்றது என்றால் (நிறைவுற்றது, சிறப்புற்றது, பெயர் பெற்றது, குன்றியது) எனப் பொருள்படும்.

5. இழுக்கின்றி என்றால் (துன்பமின்றி, கஷ்டமின்றி, துயரின்றி, பிறர் பழித்தலின்றி) எனப் பொருள்படும்.

(ஆ) அடைப்பினுள் உள்ள சரியான விடையைக் கீறிடுக.

6. ஒரு தலைவனையோ இறைவனையோ குழந்தையாகக் கருதி அதனைப் பருவங்களாக வகுத்துப் பாடும் பிரபந்தம் ......... எனப்படும் 1) பதிகம் 2) குழந்தையிலக்கியம் 3) பிள்ளைத் தமிழ் 4) தாலாட்டு

7. பணங்கொடுக்கு மாறு வங்கிக்கு எழுத்து மூலம் கட்டளையிடும் படிவம் ............ ஆகும் 1) வங்கிச்சீட்டு 2) காசோலை 3) வங்கிக் கூற்று 4) காசேடு

8. அரசுக்குரிய வருமானங்கள் சேகரித்து வைக்கப்படும் இடம் 1) களஞ்சியம் 2) திறைசேரி 3) திணைக்களம் 4) வங்கி

9. ஆய்வுக்குரிய ஒரு பொருள் பற்றி அறிஞர் ஒருவரின் தலைமையில் ஒரு குழுவினர் கூடிக் கலந்துரையாடுவது 1) விவாதம் 2) அரங்கேற்றம் 3) கருத்தரங்கு 4) வாக்குவாதம்

10. நகருக்குப் புறத்தே மக்கள் வாழும் இடம் 1) நாட்டுப்புறம் 2) புறக்கோட்டை 3) புறஞ்சேரி 4) வெளியூர்

(இ) எதிர்ச்சொற்கள் தருக

11. நிராகரித்தல் என்பது 1) அனுசரித்தல் 2) அவதானித்தல் 3) அங்கீகரித்தல் 4) அபகரித்தல்

12. விழித்திடு என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல் 1) படுத்திரு 2) எழுந்திரு 3) பார்த்திடு 4) உறங்கிடு

13. உசிதம் என்பதன் எதிர்ச்சொல் (1 அநுசிதம், 2 அநேகம், 3 அசிதம் 4 அசிசம்)

14. ஆதரவு என்பதன் எதிர்ச்சொல் (1. நிராதரவு 2 பராதரவு, 3 அநாதரவு 4 அநாசாரம்)

15. சிற்றின்பம் என்பதன் எதிர்ச்சொல் (1. முற்றின்பம், 2. பக்தியின்பம், 3 பேரின்பம், 4. சிறுமையின்பம்)

**தமிழ்மொழி பகுதி I**

சரியான சொல்லின் கீழ்க் கீறிடுக.

16. தான் அறிந்த அளவு தான் இந்த உலகம் என நினைப்பவன் (1. அறிவில்லாதவன் 2 கிணற்றுத் தவளை 3 அஞ்ஞானி 4. அவிவேகி)

17. ஒருவருக்கு இடையூறு நேரிட்ட காலத்தில் அவருக்கு வேண்டிய உதவி அளித்துக் காப்பாற்றுதல் (1. காலில் விழுதல், 2 தோள் கொடுத்தல், 3. கலிக்கு மாரடித்தல், 4 ஆறுதல் நல்கல்)

18 பொருள் பண்டமெல்லாம் இழந்து ஆதரிப்பார் எவருமின்றி நிற்றல் (1 மட்டையடித்தல், 2 பஞ்சாய்ப்பறத்தல், 3. கைவிடுதல் 4. சந்தியில் நிற்றல்)

19. மனம் சென்ற வழி நெறிதவறி நடத்தல் 1. தலைக்கொழுப்பு 2. தலையால் நடத்தல். 3. காதகுத்தல், 4. தலைக்கனம்)

20 தனக்காவது பிறருக்காவது பயனின்றி வாழ்தல் (1. தலைஎழுத்து 2 புறங்காட்டுதல், 3 நடைப்பிணம், 4. தலையளித்தல்)

21 வினைச்சொற்களில் எதிர்காலத்தை உணர்த்தும் இடைநிலைகள் (1 கின்று, கிறு) (2 த், ட்) 3 (ப், வ்) 4 (டு, டும்)

22 இராமனும் இலக்குமணனும் என்ற தொடரில் "உம்" என்ற இடைச்சொல் உணர்த்துவது (1. ஐயப்பொருள்) 2 (முற்றுப்பொருள்) 3. (சிறப்புப்பொருள்) 4. (எண்ணுப்பொருள்)

23 கடிநாய் என்பது (1. பெயரெச்சம், 2. பண்புத்தொகை, 3 வினைத்தொகை 4 உவமைத்தொகை

24. "பொற்றொடி வந்தாள்" என்பதில் பொற்றொடி (1 வேற்றுமைத் தொகை, 2. அன்மொழித்தொகை 3. வினைத்தொகை 4. உவமைத்தொகை)

25 ஒன்றினது இயற்பெயர் அதனோடு தொடர்புடைய பிறிது (1. ஆகுபெயர், 2 வினையாலணையும் பெயர் 3. குறிப்புவினை 4. சிறப்புப்பெயர்)

26. வி, பி, கு, சு, டு முதலியன (1. தன்வினை விகுதிகள், 2. பிறவினை விகுதிகள், 3. காலங்காட்டும்விகுதிகள், 4 செய்வினைவிகுதிகள்.

27. சால, உறு, தவ, நனிமுதலியன (1. திசைச்சொல் 2. திரிசொல், 3. உரிச்சொல், 4 இயற்சொல்)

28. அவன் கரியன் கரியன்என்பது (1 தெரிநிலைவினைமுற்று 2. குறிப்புவினையெச்சம், 3. குறிப்புவினை தொரு பொருளிற்கு பெயரெச்சம்)

29 இல், அல், ஆ என்பன 1) உடன்பாட்டு வினை 2) குறிப்புவினை, 3) எதிர்மறை இடைநிலைகள் 4) தெரிநிலை வினை இடைநிலைகள்)

30. காற்றுடி என்பது (காரணப்பெயர், சிறப்பு பெயர், இடுகுறிப் பெயர், காரணஇடுகுறிப் பெயர்)

இ) பொருத்தமான முடிவுப் பகுதியைத் தெரிவு செய்க

31. நீயோ, கந்தனோ 1) யாரிது செய்தார்? 2) யாரிது செய்தாய்? 3) யாரிது செய்தீர்? 4) யாரிது செய்தான்

32 குமரன் பணத்துடன் 1 கல்விமானாகவும் விளங்கினான் 2. செல்வியாளியாக விளங்கினான் 3 கல்விமான் 6 கல்விமானாக விளங்கினார்.

33 இங்கு உள்ள காய்கறிகள் எல்லாம் 1 நல்லன 2. நல்லவை 3. நல்லனவல்லர் 4 நல்லது

34 புலவர் பாடல்களை- 1 இயற்றியது 2 இயற்றினர் 3. இயற்றினன் 4 இயற்றினான்.

35 கத்தரிச் செடிகள் காய்த்துக் 1. குலுங்கியது 2 குலுங்கின 3. குலுங்கியன 4. குலுங்கினர்.

(ஈ) உலக நாடுகளில் நமது நாடு இயற்கை அழகால் சிறந்து விளங்குகின்றது வனப்பும், வளமும் மிகுந்த இந் நாட்டில் மக்கள் செல்வத்துடன் விளங்குகின்றனர் இலங்கையின் பெருந்துறையும் தலைநகருமான கொழும்பிலிருந்து இலங்கையின் மத்தியில் வானுறவோங்கி உயர்ந்த மலைகளாலும் வற்றாத அருவிகளாலும் அழகும் திருவும் மிகுந்து விளங்கும் நுவரெலியா என்னும் அணி நகரை நோக்கிப் பிரயாணம் முற்று.4. தெரிநிலைவினைப் பெயரெச்சம்)

செய்யுமொருவன் உலகில் காணப்படும் வேறுபட்ட சுவாத்தியநிலை அத்தனையையும் அனுபவித்து மகிழ்ச்சியுறுவான் ஊர்கள் தோறும் அமைந்துள்ள கலைக்கூடங்களும் பலசமயக் கோயில்களும் இங்கு பொலிந்து விளங்குகின்றன.

36 இப்பந்தியில் கூறப்படுவது.
1. இலங்கையின் எழிற் மிகு காட்சிகள் 2. இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரம் 3. இலங்கையின் செழிப்பு 4 இலங்கையின் வரட்சி

37. நுவரெலியா ஒரு 1. அழகிய ஊர் 2 அழகிய மலைநாடு 3 அருவிகளும் மலைகளும் சூழ்ந்த அழகிய நாடு)

38. திரு. என்பதன் பொருள் (செல்வம், வீரம், கல்வி)

39 கலைக்கூடங்களும், கோயில்களும் (சிறப்புற்று விளங்கியது. சிறப்புற்று விளங்குகின்றன, சிறப்புறவில்லை)

40 இப்பந்தியை வாசிப்பதால் ஏற்படுவது (இலங்கையின் இயற்கைக் காட்சிகளின் சிறப்பு, கல்விச் சிறப்பு, இலங்கையின் வளம் குன்றியமை)

கௌரி கணேஷநாதன்

### விஞ்ஞான பாடம்: இதோ விடைகள்
(சென்ற வாரத்து வினாக்களுக்கு உரியவை)

| வினா இல | | விடை | வினா இல | | விடை |
|---|---|---|---|---|---|
| 1 | — | 3 | 10 | — | 3 |
| 2 | — | 4 | 11 | — | 2 |
| 3 | — | 2 | 12 | — | 4 |
| 4 | — | 4 | 13 | — | 2 |
| 5 | — | 3 | 14 | — | 3 |
| 6 | — | 2 | 15 | — | 2 |
| 7 | — | 2 | 16 | — | 1 |
| 8 | — | 1 | 17 | — | 3 |
| 9 | — | 2 | 18 | — | 2 |

## கூட்டத்தைப் பிரிந்த குட்டி யானைகள்

சின்னஞ் சிறிய சிறுவருக்கு ஓர் இனிய தொடர் கதை

காட்டில் இரவு மிகவும் அமைதியாய் இருந்தது பறவைகளும் குரங்குகளும் வண்ணத்துப் பூச்சிகளும் தூங்கிக் கொண்டிருந்தன. பெரிய மிருகங்களும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன.

திடீரெனக் காட்டுப் பாதையினூடாகப் பெரிய நிழல்கள் தோன்றின. காட்டின் இரவில் இளந்தென்றல் போல ஒன்று ஒன்றாக, இரண்டு இரண்டாக இந்த நிழல்கள் நடந்து வந்தன. யானைக் கூட்டம் நகர்ந்து கொண்டிருந்தது. யானைகள் எங்கே போய்க் கொண்டிருந்தன?

அது குரங்குகளுக்குத் தெரியாது. பறவைகளுக்குத் தெரியாது வண்ணத்துப் பூச்சிகளுக்குத் தெரியாது.

யானைகள் எங்கே போகின்றன என்பது யானைகளுக்குத்தான் தெரியும். அவை எங்கோ போய்க் கொண்டிருந்தன.

காலை வந்தது. சூரியன் மரங்களுக்கூடாக வெளியே தலையை நீட்டியது. இளந் தென்றல் இலைகளை வருடிச் சென்றது. மஞ்சள் நிற, பச்சை நிறஇலைகள் அனைத்தும் சூரிய வெளிச்சத்தில் நடனமாடின.

காடு விழித்து எழுந்தது பறவைகள் கீதம் இசைத்தன. குரங்குகள் மரக் கொடிகளில் நர்த்தனம் ஆடின. வண்ணத்துப் பூச்சிகள் சூரிய வெளிச்சத்தில் அங்கும் இங்குமாகப் பறந்தன. பெரிய மிருகங்கள் விழித்தெழுந்து கொட்டாவி விட்டன

யானைகள் என்ன செய்தன? யானைகள் ஓரிடத்தில் நின்று தின்றன. அவை மரங்களைத் தள்ளி விழுத்தி இலைகளைத் தின்றன. அவை தமது தந்தங்களால் கிண்டி மென்மையான வேர்களைத் தோண்டி எடுத்தன. அவை பழ மரங்களை ஆட்டிக் குலுக்கிப் பழங்களை விழச் செய்தன.

யானைகளுக்குச் சாப்பிடுவதில் எவ்வளவு விருப்பம்! அவை சாப்பிடும் ஒலியை ஒரு மைல் தூரத்தில் கேட்கலாம்.

யானைகள் மீண்டும் நகரத் தொடங்கின. பெண் யானைகளும் ஆண் யானைகளும் குட்டி யானைகளும் எல்லாம் தலைமை யானையைப் பின் தொடர்ந்து சென்றன. அவை எங்கே போகின்றன?

குரங்குகள் நின்று பார்த்தன யானைகள் எங்கே போகின்றன என்பது யானைகளுக்குத் தெரியும். ஆனால் அவை குரங்குகளுக்கா சொல்லப் போகின்றன!

ஆகாயத்தில் சூரியன் மேலே வர வர யானைகள் மெதுவாக நடக்கத் தொடங்கின. நண்பகலில் வெப்பம் கடுமையாகியது யானைகள் களைத்துப் போய் விட்டன. அவை பெரிய விசாலமான சமவெளி ஒன்றை அடைந்தன. அங்கு யானைப் புல் நிறைய இருந்தது.

யானைகள் அங்கு இளைப்பாறின.

யானைப் புல்லின் மத்தியில் யானைகள் என்ன செய்கின்றன? விரும்பியது அனைத்தையும் செய்கின்றன தாய் யானைகள் வட்டமாக நின்று வம்பளக்கின்றன. தமது வால்களை ஆட்டுகின்றன. யானைக்குட்டிகள் ஓடுகின்றன துதிக்கைகளை இழுத்து விளையாடுகின்றன ஒன்றை ஒன்று தள்ளுகின்றன. களைத்துப் போனபோது ஓய்வெடுக்கின்றன

மிருதுவான மிகச்சிறிய யானைக்குட்டிகள் பால் குடித்துக் கொண்டே தாய் யானைகளுடன் தங்கி நிற்கின்றன மிகப் பெரிய பலமான ஆண் யானைகள் தூங்குகின்றன.

இந்த யானைக் கூட்டத்தில் இரண்டு குட்டி யானைகள் இருந்தன. இன்று அவை இழுத்து விளையாடவுமில்லை. தலைகளை முட்டி விளையாடவுமில்லை. சுற்றி ஓடவுமில்லை. அவை யானைக் கூட்டத்திலிருந்து பிரிந்து தனியாக நடைபோட்டன

(இன்னும் இருக்கு)

வீ. சின்னத்தம்பி




சிறுவர்களுக்காக தனது வாழ்நாள் முழுவதையும் கழித்தவர் ஆங்கில தேசமொன்றைச் சேர்ந்த வால்ட் டிஸ்னி சிறுவர்களுக்கு பல வேடிக்கைப் படங்களைத் தயாரித்து உலக நாட்டில் உள்ள அனைத்து சிறுவர், சிறுமியரை மகிழ்ச்சிக்கடலுள் ஆழ்த்தியவர்

பல நாடுகளில் இவரது படங்களின் அபிமான நட்சத்திரங்களான டொனல் டக், மிக்கி மவுஸ் போன்றவற்றின் படம் என்றால் அங்கு சிறுவர் கூட்டம் திரளும்.

அவரது படங்களின் நட்சத்திரங்கள் கேலிச் சித்திரங்களே அக்கேலிச் சித்திரங்கள் ஆங்கிலத்தில் 'கார்ட்டூன்' எனப்படும் இவர் தனது முழுக்கவனமும் யாரையும் சிரிக்கவைக்கக்கூடிய படங்களை தயாரிப்பதே யாகும் அவர் தயாரிப்பது கார்ட்டூன் படங்கள் ஆனாலும் அங்கும் ஓரளவு இயற்கைக் காட்சிபோல தோன்றும் பகுதிகளும் உள்ளன.

1923ல் சினிமாப் படங்களை தயாரிக்கத்தொடங்கிய இவர், அவர் வாழ் நாள் முழுவதும் 600 படங்களை தயாரித்தார்.

## சிறுவரைக் கவர்ந்த சிந்தனையாளர்

முழுநீள கார்ட்டூன் சினிமாப்படத்தை முதன் முதல் தயாரித்தவர் இவர்தான்

இதன்படி அவர் தயாரித்த முதல் ஆங்கில கார்ட்டூன் படம் 'தூங்கும் அழகி' இப்படத்திற்காக அவர் 50 ஆயிரம் படங்களை வரைந்தார்

இப்படம் 7 வருடங்களாக தயாரிக்கப்பட்டது.

முதன்முதல் வர்ணப் படம் எடுத்தவரும் வால்ட் டிஸ்னியே ஆவார். 1938ல் 'ஸ்னோ வைட்டும் ஏழு குள்ளர்களும்' எனும் படத்தை வர்ணத்தில் தயாரித்தார். 'ஞாபகமறதிப் பேராசிரியர்' இவர் எடுத்த நகைச்சுவை மிஞ்சிய படமாகும். மேலும் 'வாழும் பாலைவனம்', 'காட்டுப்பூனை' 'கடலுக்கடியில் 20 ஆயிரம் ஆண்டுகள்' போன்றன மிகச்சிறந்த படங்களாக தெரிவு செய்யப்பட்டன.

இவர் சிறுவர்கட்காக அமைத்த 'டிஸ்னிலான்ட்' எனும் இடம் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதக்கூடிய ஓர் அற்புத உலகாகும் அவர் 17 ஆண்டுக்குமுன் 60 ஏக்கர் நிலத்தை தன் சொத்திலிருந்து எடுத்துப் பயன்படுத்தினார். அப்போதிருந்த உலகத் தலைவர்களான நேரு, குருசேவ் போன்றவர்கள் இவரது செயலை வெகுவாகப் பாராட்டினர்.

இப்படி தனது வாழ்நாளையே சிறுவர்கட்காக அர்ப்பணித்த வால்ட் டிஸ்னி தனது 64 வது வயதில் (1980-டிசம்பர்- 15ல்) மரணமானார். இவர் இறப்பதற்கு காரணமாயிருந்தது இவரது இடது நுரையீரலில் புண் ஏற்பட்டதால்அதனைஅகற்றினர். இதனாலேயே இவர் இறக்கநேரிட்டது. இவர் 1925ல் லில்லியன் என்ற பெண்ணை மணந்தார். இவருக்கு இரு பெண் பிள்ளைகள் உண்டு

(நீங்களும் வால்ட் டிஸ்னியுடன் கடந்த மாதங்களில் ரூபவாஹினியில் ஞாயிறு மாலையில் ஒளி பரப்பப்படும் வால்ட் டிஸ்னியின் படங்களைப் பார்த்து மகிழ்ந்திருக்கலாம்)

தி. தவபாலன்
(யாழ் மத்திய கல்லூரி)

## தெய்வீக நெறி

**பேச்சு**

மிருதுவாகப்பேசு; இனிமையாகப் பேசு சுருக்கமாகப்பேசு; மெய்யே பேசு; அன்பாகப்பேசு: மௌனம் கடைப்பிடி; எச்சரிக்கையுடன் சிந்தித்துப் பிறகே பேசு.

**தொண்டு**

ஏழைக்குதவு - நோயாளிகளுக்கும் ஏழைகளுக்கும் தொண்டுசெய்; அன்புடனும் சிரத்தையுடனும் தொண்டுசெய்; தொண்டே வழிபாடாகும். இதுவே மேலான நெறி. ஓர் சாரணனாக மாறு. முதல் உதவியைக் கற்றுக் கொள்.

**வழிபாடு**

பிரார்த்தனை செய். உள்ளத்தே நினை. நாள் தோறும் இறைவனின் நாமங்களைச் சொல்; அன்போடும், தெய்வீக உணர்வோடும் ஓர்மை மனதுடன் வேண்டு தூய்மை, அறிவு, பக்தி இவைகளை அருளும்படி ஆண்டவனை வேண்டு. ஸ்ரீராம் - ஓம் நமோ நாராயணாய— இயேசு - ஓம் நமோ பகவதே வாசுதேவாய - அல்லா - ஓம் நமசிவாய என இறைவன் நாமத்தை பல தடவை சொல்.

- சுவாமி சிவானந்தா
- தொகுப்பு: உடுவில் திலகம்

## வாழ்க்கையில் நீங்கள் உயர்வதற்குப் பொறுமையைக் கடைப்பிடியுங்கள்

வாழ்விலே உள்ள அருங் குணங்களில் பொறுமை என்ற பெருங் குணத்தை எல்லோராலும் கடைப்பிடிக்க முடியாது. பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாம் சாதாரணமாகக் கூறிக் கொள்ளலாம். ஆனால் எம் சொல்லை நாம் எவ்வாறு நடைமுறைக்கு கொண்டு வரமுடியும் என்பதுதான் நாம் குறிப்பாக ஆராய வேண்டிய விஷயம். "பொறுமை" என்ற குணத்தை எல்லோரும் நல்ல பண்பாக ஏற்றுக் கொண்டு விட்டாலும், அதை நாம் சொல்லளவில் நிறுத்திவிட்டால் நம் நோக்கின் எல்லையை நாம் அடைய முடியாது. அறிவின்மையிலும் பார்க்க, பொறுமையின்மை எவ்வளவோ முற்போக்கான செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றது. எனவே எவரின் வாழ்க்கையிலும் பொறுமை இன்றியமையாத ஓர் பிரதான இடத்தைப் பெறுகின்றது.

இதனாலன்றோ எமது ஆன்றோர்கூட, "பொறுத்தார் பூமியாள்வார்" என்று இரத்தினச் சுருக்கமாக பொறுமைக்கு வரைவிலக்கணம் வகுத்துள்ளனர்.

எவர் ஒருவர் பொறுமை உள்ளவராகக் காணப்படுகின்றாரோ அவர் சகல துறைகளிலும் தேர்ச்சியுள்ளவர் என்று நாம் திட்டவட்டமாகக் கூற முடியும். பொறுமையின்மை மனத்தின் சிக்கலின் ஓர் எடுத்துக் காட்டு என்று நாம் துணிவுடன் கூற முடியும் பொறுமை யற்ற மனம் எதிலும் சாந்தி காண முடியாது. அத்துடன் பொறுமை யற்ற மனம் எப்பொழுதும் துரிதமான வெற்றி காண்பதற்காக குறுக்கு வழிகளில் சென்று தோல்வியடையும் அவ்வேளையில் அம் மனம் கதிகலங்கிய நிலையையடைந்து பொறுமையை இழக்கின்றது இதனால் மனம் சலனப்படுகின்றது. இதே தவிர்ப்பதற்கு ஒரே வழி பொறுமையை கடைப்பிடிப்பதேயன்றி வேறொன்றுமில்லை

மேலும் நாம் எமது பழக்கவழக்கங்களை வாழ்க்கையின் போக்கிற்கு ஏற்றவாறு திருத்தி அமைக்க முயலவேண்டும். திருத்தியமைக்க முயலும்பொழுது எம்மிடம் உள்ள குறைகளையும் நிவிர்த்தி செய்தல் உகந்ததாகும். சில சமயங்களில் எங்களிடத்தில் உதயமாகும் புது எண்ணங்களை — இவற்றால் என்ன பயன்? என்ற காரணத்தினால் தட்டிக் கழிப்பதுமுண்டு. நாம் நடப்பதற்குமுன்னர் ஓட முயல்வோம் என்று எண்ணுதல் தவறான எண்ணத்தை வளர்ப்பதாகும். எங்களுடைய பொறுமையினாலேயே எம்மை நாம் முன்னேற்றப்பாதையில் செலுத்த முடிகின்றது. அத்துடன் நில்லாது பிறர் பொறுமையும் எங்களுக்கு வேண்டியிருக்கின்றது. எங்களுடன் கலந்து உரையாடும் பலருக்கு எம்மிடத்தில் இனிய முறையில் பழகுவது எவ்விதம் என்பது பற்றி தெரியாமலிருக்கலாம். அதனால் அவர்கள் எங்களுடன் கலந்து உறவாடும் முறை பிழை என்று கருதி நாம் பொறுமையை இழந்து விடக் கூடாது. பொறுமையை நாம் நாளடைவில் அனுஷ்டிப்பது கடினமாகக் காணப்பட்டாலும், பொதுவாக எல்லோர் வாழ்விலும் பொறுமை பெரிதும் பயன் அளிக்கின்றது.

நாம் பொறுமையை கைக்கொள்வதினால் மற்

(6 ஆம் பக்கம் பார்க்க)



### தீருமா தவிப்பு?

சீதனக் கொடுமையால்
சீரழிந்த குடும்பம் பல

பாவி மனிதரின்
பணத்தாசையினால்
இருந்ததைக் கொடுத்து விட்டு
இல்லாமல் தவித்திருக்கும்
சீதனக் கொடுமையால்
சீரழிந்த குடும்பம் பல

பெண் என்றும் தாய்தான்
பெண்ணிடம் சீதனம் கேட்டு
சீதனம் இன்றிச் சென்றால்
மாமியாராய் கொடுமை தினம் தொடங்கிடுவாள்

ஆண்கள் காதலிக்க முன்பு
சீதனம் வேண்டாமென்பர்
அது கல்யாணத்தில் முடிந்துவிட்டால்
எங்கே சீதனம் என்பர்

இந்த இருவருக்கும் நடுவில் பெண்
இருதலைக் கொள்ளி எறும்பினைப்போல்
தவிக்கின்ற பெண்களின்
அவலம் என்றுதான் தீருமோ?

கங்கா துரைராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளித் திரை

# பாலசந்தரின் திரைப்படங்கள்

# ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாணி

## அவரே சொல்கிறார்

ஒரே மாதிரியான படங்களை நான் எடுப்பதில்லை எனது படங்களை ஒவ்வொன்றை ஒவ்வொரு பாணியில் — வெவ்வேறு விதமான கதை அமைப்புடன் எடுத்திருக்கிறேன்.

இப்படி கூறுகிறார் தமிழ்த் திரையுலகின் பிரபல டைரக்டர் கே. பாலசந்தர்.

அவர் மேலும் கூறுகிறார்:

காதல் கதை, நகைச்சுவைப்படம், நடுத்தரக் குடும்பத்துப் பிரச்சினை —இப்படி வித்தியாசமான படங்களை இயக்கி உள்ளேன் சமுதாயப் பிரச்சினைகளைச் சாடியிருக்கிறேன்.

ஒவ்வொரு விதமான கதையமைப்புக்கொண்ட படங்களில் எனக்குத் திருப்தி அளித்த படங்களும் உள்ளன.

உதாரணமாக நகைச்சுவை என்றால் 'பாமா விஜயம்'

காதல் கதை என்றால் 'மரோசரித்ரா'

நடுத்தரக் குடும்பத்துப் பெண்ணின் பிரச்சினை என்றால் 'அவள் ஒரு தொடர்கதை'

சமூகப் பிரச்சினை என்றால் 'தண்ணீர் தண்ணீர்'

இசைப்படம் என்றால் 'சிந்துபைரவி'

### தயாரிப்பு பேரின்பம்

வேலையில்லாத் திண்டாட்டம் என்றால் 'வறுமையின் நிறம் சிவப்பு'

'மன்மதலீலை' 'நினைத்தாலே இனிக்கும்', 'கல்யாண அகதிகள்' போன்ற படங்களை ரசிகர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கலாம்.

ஆனால் எனக்கு அந்தப்படங்கள் திருப்தி தந்தன.

பொதுவாக எல்லோருமே கதைகளைத்தான் இப்படி சம்மதிக்கிறேன் அத்தோடு ரசிகர்களைக் வருமா என்றும் யோசிக்கிறேன்

இப்படிச் சொல்கிறார் பாலசந்தர்.

## 'இதம் சங்கீதம்' வேகமாக வருகிறது

ஆர். டி எம் ஆர்ட் கிரியேஷன்ஸ் தயாரிக்கும் புதிய படத்திற்கு 'இதம் சங்கீதம்' என்று பெயரிட்டு இருக்கிறார்கள்.

இதன் தொடக்க விழா பூஜை பாடல் பதிவுடன் ஏ. வி. எம் ஸ்ருடியோவில் நடந்தது. பி. சுசீலா குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்தார்

ஆர். டி மணவாளன் தயாரிக்கும் இந்தப்படத்திற்கு ராஜராஜன் ஒலிப்பதிவு செய்ய கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எழுதி இசை அமைத்து டைரக்ட் செய்கிறார் சித்தார்த்தா.

படம் வேகமாக வளருகிறது.

## வாழ்க்கையில் நீங்கள்---

(5ஆம் பக்க தொடர்ச்சி)

றவர்கள் கருத்தை அவதானிப்பதற்கும் சமயத்தில் உதவுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது உதாரணமாக எம்மில் பலர் வாழ்வில் விரக்தியடைந்து வெறுப்பற்று, வேதனையே உருவாக, வாடிய முகத்தோடு என்றும் சோகத்தையே சாடிய வண்ணம் சோபிதமிழந்து இருப்பர் இப்பேர்ப்பட்ட உள்ளம் வெதும்பிய நிலையுள்ளவர்களைப் பார்த்துப் பிரிந்து பேசுபவர்களைவிட எரிந்துவிழுவோர்களைத்தான் நாம் அதிகம் காண முடியும்


ஆனால்பொறுமையாகப் பேசி, வாழ்வின் இலட்சியத்தை, மேம்பாட்டை வாழ வேண்டிய அவசியத்தைப் பக்குவமாக — ஆனால் பொறுமையாக— வலியுறுத்துவோமானால் நேரிய பலனையும், கோரிய நலனையும் காலப்போக்கில் நிச்சயம் எதிர்பார்க்கலாம் இவ்வித அனுகூலத்திற்கு நாட்கள், வாரங்கள் ஏன் மாதங்கள் கூட பிடிக்கலாம். அதற்காக பொறுமையை இழந்துவிடக் கூடாது கஷ்டங்கள், கடன் தொல்லைகள், குடும்பத்தாராறுகள் உத்தியோகமின்மை, தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை மற்றும் வாழ்க்கையின் கொடிய பிணியான வறுமை ஆகிய இன்னோரன்ன பயங்கர பிசாசுகளைக் கண்டு கலவரமடையக் கூடாது — கவலைப்படவும் கூடாது மாறாக பொறுமையாக, சகிப்புத் தன்மையுடன் சாதுரியமாக நடந்து கொண்டால் ஈற்றில் கிட்டுவது வெற்றியேயன்றி ஒரு போதும் தோல்வியேயல்ல.

முதியோர்கள் ஒரு பொழுதும் பொறுமையை இழந்து காரியத்தைக் கெடுத்து விடமாட்டார்கள், அவர்கள் தங்கள் அனுபவத்தின் வாயிலாகவே காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். சிலர் கோழை மனப்பான்மையினால்தான் ஒருவர் பொறுமையாக இருக்கின்றார். என்று கருதக்கூடும். ஆனால் அது உண்மையல்ல பொறுமையின் பெறுமதியை நன்குணர்ந்தே அவ்வித உறுதி மனப்பான்மையுடன் அவர்கள் இருக்கின்றார்கள் என்று தான் நாம் கூறலாம். பொறுமை ஓர் சிறந்த அணிகலன் — வாழ்வின் உயர்ச்சிக்கு. காலம் இதற்கு பல சான்றுகளை உலகிற்கு உணர்த்தியுள்ளது என்பதை வரலாறு தெரிந்தோர் அறிவர்.

நன்றி: உன்னைப்பற்றி

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 42



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி: ..............................

..............................

வயது ..............................

விலாசம் ..............................

..............................

ஒப்பம் ..............................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பக் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. கரை ஏறி கோழி பிடிக்காதவன் வானம் ஏறி ......... போவானு? | 1. மருந்துவன் |
| 3. நள்ளிரவு | 2. மங்கள வாத்தியக் கருவி |
| 6. நாராயணன் | 4. பதுமை |
| 9. விரும்பு | 5. மேடை |
| 11 குபேரனின் மனைவி குழம்பியுள்ளாள் | 7. சுவை |
| 12 வீதிக்கடை | 8. பெருமை |
| 14. சருமவியாதி | 10. கங்கைக்கரையின் புண்ணிய பூமி தலைகீழாக உள்ளது |
| 15 சாப்பாட்டைத் தயார் செய் | 12. யானையை அடக்குவது |
| 16 ஆணுமல்ல! பெண்ணுமல்ல | 13 எமது அயல் நாடொன்றின் தலைநகரம் ஈரெழுத்து இழந்து போயிற்று |
| 17 அழகில் சிறந்தவள் மாறியுள்ளாள் | 15 யுத்தத்தின் பின்னர் இதுவும் நடப்பதுண்டு |
| 18 இருக்கை | 16 பாணம் |
| 19 பலர் கூடுவதற்கு வசதியான இடம் | 17. புத்தி தலைகீழாகி விட்டது |
| 20. உலகம் | |

### சொற்சிலம்பம் இல. 40 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1 விபத்து, 5 சதி 6. தாமிரம், 8 மின்குமிழ், 11 கதி, 12 மூடன் 13. வலை, 14 கான் 16 மாறு, 17. ரஞ்சிதம் 19. சாம் 20. ரண்அ 21. சித்தி, 22 வெம்மை. | 1. விசமி, 2 பதின்மூன்று, 3 உமி, 4. நம்தி 6 தாழ், 7. ரகளை, 9. குட, 10. மின்சாரம், 13 வசிரம், 14 காமாட்சி, 15 மிம்அ, 18 தன்மை 19. சாதி. |

### சொற்சிலம்பம் இல. 40 பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம்பரிசு;- செல்வி செல்வரதி செல்வரத்தினம், புகையிரத நிலையப் பக்கம், எழுதுமட்டுவாள்.

இரண்டாம் பரிசு:- செல்வி. சுமதி சாம்பசிவம், 'ஸ்ரீரங்கம்' இராஜவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்

மூன்றும் பரிசு:- செல்வன் யோ சேந்தன், செந்தில் வாசம், வட்டுக்கோட்டை,

குறிப்பு:-

பரிசுபெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாளஅத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும்.

எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

## பண்டிதமணி வரலாறு---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வயது போதாதெனக் கண்டு, தாம் பிறந்த ஊருக்கேகி அங்கே சங்கத்தலை ஆங்கில பாடசாலை எனவழங்கிய சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆரம்பவகுப்பிற் சேர்ந்து ஆங்கிலங்கற்று, இரண்டாண்டுகாலத்தில் ஆறும் வகுப்புக்கு அனுமதி பெற்றார்

அக்காலத்தில் குருகவி மகாலிங்கசிவம் அவர்களின் தொடர்பால் இலக்கிய இலக்கணம் கற்றுப் பிரவேச பண்டித பரீட்சையிலும் சித்திபெற்றார் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் ஆரம்பிக்கப் பெற்றதும் அக்காலத் நிலையேயாம்

### அதிர்ச்சி சம்பவம்

பிரவேச பண்டித பரீட்சையைத் தொடர்ந்து ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சையை எடுத்துச் சித்திபெற்றுக் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து படித்துவந்த காலத்தில், இவருக்கு அதிர்ச்சிதரும் சம்பவம் ஒன்று காத்திருந்தது அதிபர் பொன்னையா அவர்கள் இவரை இரகசியமாக அழைத்து-

'என்ன செய்யப்போகிறீர் காணும், உமக்கு இங்கே இருப்பதற்கு வயது காணாது நீர்வெளியேற வேண்டிவரும்' என்றார்

இவர் என்னசெய்வதென்று தெரியாது வெம்பியநிலையில் நின்றபோது, 'சரிகாணும் எவருக்கும் இதைப்பற்றிக் கூறுதேயும். நான் இயன்றளவு உம்மை இங்கே வைத்திருக்க முயற்சி செய்கிறேன்' என்று ஊக்கமளித்தார்.

ஐயர் அவர்களின் இனிய சுபாவம் ஆசிரிய கலாசாலைப் பேராசிரியர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் வெகுவாகப் பிடித்திருந்தது. ஆசிரிய கலாசாலையில் இரண்டாம் ஆண்டு, அஃதாவது இறுதியாண்டுப் பயிற்சியாளருள் ஒருவரான வேலணையூர்ப் பண்டிதர் மருதையனார் அவர்கள் ஐயரவர்களும் இன்னொருவரும் பிரவேச பரீட்சையில் சமனான புள்ளிகள் பெற்று முதலிடத்தைப் பெற்றிருந்ததை எங்ஙனமோ அறிந்திருந்தார்

ஆசிரிய கலாசாலையில் புவியியல் பேராசிரியராயிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த வைரமுத்தர், ஐயரவர்களின் திறமையை அறிந்திருந்தவர் ஐயரவர்களைத் தங்கள் சாதனா பாடசாலையில் நியமித்ததால், அவர் ஆசிரிய கலாசாலையில் வரைதல் பாடத்தையும் பழக்குவதற்கு வசதியும் வாய்ப்பும் அமையலாம் என்று அதிபர் பொன்னையா அவர்களுக்குத் தகவுரை வழங்கினார்.

இவர் சந்திரமௌலீசர் வித்தியாசாலையில் சில மாதங்கள் படிப்பித்து வந்தகாலத்தில், சமாசனப் பிரச்சினை காரணமாக லோ. செல்லப்பா அவர்கள் பரிகுனி மாத விடுமுறையை நீடித்து வழங்கினார் நீண்ட விடுமுறையில் நன்ற ஐயர் அவர்களின் அருமையை அறிந்த இராசரத்தினம் அவர்கள், 1930ஆம் ஆண்டின் வைகாசி மாதத்தில் இவரைச் சைவாசிரிய கலாசாலையில் நியமித்தார்.

இவர் சில மாதங்கள் முத்துத்தம்பி வித்தியாசாலையில் நடைபெற்ற ஆசிரிய கலாசாலைப் பிரவேச வகுப்பில் படிப்பித்தபின்னர், அவ்வருடத்து ஆவணி மாதம் முதல் சைவாசிரிய கலாசாலையில் பேராசிரியராயினார் இவரை அங்கே வரவேற்பதில் அதிபர் சுவாமிநாதன் பெருமகிழ்ச்சியடைந்தார். அவர் முன்னர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் அவருடைய மாணாக்கராயிருந்தவர் என்பதால்—

இங்ஙனமாகச் சைவாசிரிய கலாசாலையில் அதிபர் சுவாமிநாதன் அவர்களும் ஐயரவர்களும் ஒருபுறமாகவும் உபஅதிபர் கைலாசபதி அவர்களும் பண்டிதமணி அவர்களும் ஒருபுறமாகவும் அமர்ந்து உரையாடிவருவராயினர்.

(வளரும்)

## காலத்தால் அழியாத...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய அரசாங்கம் என்று கருதப்பட்டு வந்தது

உலகம் முழுவதையும் கட்டியாண்ட சாம்ராஜ்ஜியமோ, அரசாங்கமோ எக்காலத்திலும் இருந்ததில்லை. ஆனால் பழைய காலத்து மக்கள் அத்தகைய அரசாங்கம் ஒன்று இருந்ததாக எண்ணி வந்தார்கள்.

அதற்குக் காரணம் பூகோள சாஸ்திர ஞானக் குறைவும் உலகின் ஒரு மூலையில் இருந்து மற்றொரு மூலைக்குப் போவதில் இருந்த கஷ்டமும்தான்

ஐரோப்பாவில் மத்தியதரைக்கடலைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் ரோம அரசாங்கமானது சாம்ராஜ்ஜியமாவதற்கு முன்பே மற்ற அரசாங்கங்களுக்கு மேற்பட்ட ஒரு அரசாங்கம் என்று கருதப்பட்டது

சின்ன ஆசியாவிலிருந்தும் கிரேக்க சாம்ராஜ்ஜியமாகிய பெர்சியம் எகிப்து முதலான நாடுகளை ஆண்டவர்கள் தாங்களே வலுவில் சென்று ரோமர்களுக்குத் தங்கள் நாடுகளைத் தானமாக வழங்கினார்கள். என்றால் ரோம அரசாங்கத்திற்கு இருந்த கௌரவத்தைப் பற்றியும் மகத்துவத்தைப் பற்றியும் நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை

ரோமாபுரி எவராலும் எதிர்க்க முடியாத சர்வ வல்லமை வாய்ந்ததென்று அவர்கள் கருதினார்கள்.

ஆயினும் ரோமாபுரி குடியரசாக இருந்த காலத்திலும் சரி சாம்ராஜ்ஜியமாக இருந்த காலத்திலும் சரி மத்திய தரைக்கடல் நாடுகளுக்கப்பால் அதன் ஆட்சி செல்லவில்லை.

வட ஐரோப்பாவில் வாழ்ந்த காட்டுமிராண்டிகள் அதற்கடங்கிப் போகவில்லை. அதுவும் அவர்களைப்பற்றி அதிகம் கவலை கொள்ளவில்லை

ரோமாபுரியில் ஆக்ஞா சக்கரம் சுழன்ற எல்லையின் அளவு குறுகியதாயிருப்பினும் அது ஒரு உலக அரசாங்கம் என்ற எண்ணம் அதற்குப் பின்னே இருந்தது.

இவ்வெண்ணத்தை அந்நாளிலே மேல்நாடுகளில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் ஒப்புக்கொண்டிருந்தனர்

ரோம சாம்ராஜ்ஜியங்கள் நெடுங்காலம் நிலைபெற்றிருந்ததற்கு காரணம் இதுதான் அவர் உயிர் அற்ற வெறும் தோற்றமாக மாறிய காலத்திலும் அவர்களுக்கு இருந்த பெரும் பிரதாபமும் பிரமாதமாக இருந்தன.

(தொடரும்)

## மணி மொழி

கனிந்த மரம் வெளவாலை இங்கே வா என்று அழைப்பதில்லை அதுபோலத்தான் நல்ல காரியங்களும் எம்மை தேடி ஓடி வருவதில்லை எந்தக் காரியம் நமக்கு நிறைவேற வேண்டியுள்ளதோ அதற்கு நமது சலிப்பற்ற விடாமுயற்சி அவசியமாகின்றது

## சிவம் என்றால் உண்மை---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவியுள்ளனர். கருங்கல் கூறின் இலத்திரன்களின் சுழற்சியினால் எழுந்த சக்தியே இன்று யாம் காணும் சகல உருவமுடைய பொருள்களுக்கும் அடிப்படை.

இதிலிருந்து கடவுள் அனைத்திலும் சக்தி வடிவமாய் உள்ளான் என்ற உண்மை எமக்குப் புலப்படுத்தப்படுகின்றது. முழு(Material) உலகமும் கடவுளால் உருவாக்கப்பட்டது — கடவுளால், சக்தியால் நிரப்பப்பட்டது.

இதனாற்றான் நம்முன்னோர் சிவமே சக்தி என்றும் சக்தியே சிவமென்றும் கூறினர். இங்கு சிவமென்று குறிப்பிடப்பட்டது உண்மையையே யாகும்

### தனியுரிமை கடவுள் இல்லை

சிவமானது எந்த மதத்திற்கோ மனிதர்களுக்கோ சொந்தமான தனியுரிமைக் கடவுளன்று. நாம் எப்பொழுதும் உண்மைக்கு அண்மையிலும் அதனுள்ளும் இருக்கின்றோம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நுண்ணறிவு படைத்த, அக ஒளியைக் கண்ட ஞானிகளால் உரைக்கப்பட்ட உண்மை இன்றுதான் விஞ்ஞானிகளால் நிறுவப்படுகின்றது ஆய்வுகூடமோ, பரிசோதனைக் குழாய்களோ, விஞ்ஞான வசதிகளோ கொண்டிராத நுண்ணறிவு படைத்த ஞானி அன்று கண்டதை நவீன கருவிகளைக் கொண்டு தமது ஆய்வு கூடங்களில் பரிசோதனைகளை மேற்கொண்ட விஞ்ஞானிகள் இன்று அவ் உண்மையை உறுதிப்படுத்தும் — எண்பிக்கும் பாங்கு ஊன்றி நோக்கத்தக்கது

மோசஸ் (Moses) எரியும் புதரை அணுகிய போது கடவுள் அவரிடம் பேசினாராம். எரியும் புதர் அழலாய் சுடர்விட்டதாம் அவர் அன்று கண்டதீச்சுடரே கடவுள். ஆனால் மோசஸ் அன்று கேட்ட குரலோ இறைவனுடையதென்ற கூற்று சந்தேகத்திற்குரியது. அக்குரலானது மோசஸின் அடிமனத்திலிருந்து(Sub Consious) புறப்பட்ட ஊக்குவிக்கப்பட்ட குரலாக இருக்கலாம்.

### உண்மையை மறுதலிப்பதா?

எல்லையற்ற சக்தியாகிய கடவுளைப் பேசும் மனிதனுடன் ஒப்பிடுவது உண்மையையே மறுதலிக்கும் செயலாகும். வரையறைகளிற்கு உட்பட்ட உருவங்களோடும் குரல்களோடும் கடவுளை ஒப்பிட முடியாது. மனத்தைக் கடந்து உள்ளே சென்றால் இருள் அகலும். உண்மை துலங்கும் என்பதை காட்டவே "கடவுள்" என்ற சொற்பதம் உபயோகத்தில் வந்தது என்பதை நாம் உணரவேண்டும்.

முடிவான உண்மையை (absolute truth) - தன்னியல்பான முழுமையான உண்மையை அடைவதற்குத் திசைகளைக் கொண்ட பாதையெவுதுவும் இடையாது அகத்தை நோக்கி மேற்கொள்படும் அந்த விழுமிய பயணத்திற்கு மனித அனுபவங்கள் தடையாகவே அமையும். அநுபவங்கள் காலத்தை ஒட்டியவை காலத்தால் வலுப்பெறுபவை.எனவே அவை முடிவிற்கு வரும் இயல்புடையவை.

### கற்பூரங்களும் மெழுகுவர்த்திகளும்

உண்மையோ தொடக்கமும் முடிவும் மற்றது. இந்த உண்மையை, உள்ளொளியின் மகத்துவத்தைப் புகட்டவே கோயில்களில் கற்பூரங்களும், மெழுகுவர்த்திகளும் தீபங்களும் மின்னொளிகளும் உபயோகிக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் புறத்தே காட்டப்படும் ஒளியாகக் கருதி அகத்தில் இருளை தாராளமாகத் தேக்கி வைத்துக் கொண்டு புறவாழ்வில் மயங்கி பகட்டை விரும்பி பெறும் கற்பனைவாதங்களையும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கூறிக்கொண்டு அந்தையுடன் மனிதன் தன் பொன்னான காலத்தைக் கழித்துக் கொண்டு குதூகலிக்கின்றான்.

அக ஒளியைத்தான் கோயில்களில் புற ஒளியாய்க் காட்டுகின்றார்கள் என்ற உண்மையை மனிதன் உணர மறுக்கின்றான். அகத்தில் நாம் உண்மை வெளியை ஏற்றிவைக்கத் தேவையில்லை. ஒளியானது இல்லாவிட்டால் தானே ஒளியை ஏற்றிவைக்க வேண்டும்? அகத்திலுள்ள ஒளியை எமது அகத்தில் நிறைந்திருக்கும் அறியாமையென்னும் இருள் மறைத்துவிட்டது தான்! தனது ஆணவ இருள் மறைத்துக் குருடனாகிவிட்டது.

## பறங்கித் தளபதி---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பூஜை மணி ஒலிக்கிறது. அது கேட்ட மன்னன் 'அம்மா வீரமாகாளி! எங்கள் வீரத்தாயே! நின் ஆசி என்றும் எமக்குக் கிட்டட்டும் நின் பாதம் போற்றி நின் பாதம் போற்றி' என வணங்குகிறான் மன்னன் ஜெபிப்பதை உணர்ந்து கொண்ட அவனது குதிரையும் சடுதியாக கோவில் திசைப்பக்கம் திரும்பி தானும் சாமி கும்பிடுவதைப் போல் முன்னங்கால்களைத் தூக்கி யெழுந்துவிட்டு நிற்கிறது. அது கண்டு களிப்படைந்த மன்னன் தன் புரவியின் பிடரியில் செல்லமாகத் தடவிக் கொடுக்கிறான்.

அவ்வேளை ஒய்ந்து போன போர்க்களத்துக்குள் பாய்ந்து வருகிறது கொக்கு... இம்முறை கொக்கு கொண்டுவரும் சேதியை ஆவலுடன் எதிர்பார்க்கிறான் மன்னன். மன்னனை அண்மித்த கொக்கு... மகிழ்ச்சிப் பெருக்குடன் துள்ளிக்குதித்த வேகத்தே ... இப் பறங்கிப்படையில் ஒருவரும் மீதமில்லை! கரைப்பிட்டி வன்னியன் படை எல்லோரையும் சங்காரம் செய்துவிட்டது' என்று மகிழ்வுடன் செப்புகிறது. அதுகேட்டு உள்ளம் பூரித்த மன்னன் தன் வைர மோதிரத்தைக் கழற்றி கொக்கிடம் அன்பளிப்புச் செய்து விட்டு 'கரைப்பிட்டி வன்னியனையும் படையையும் கொழும்புத்துறையைக் காவல் புரியுமாறு சொல்லவும்' என்று கூற சிரம் தாழ்த்தி நன்றி சொன்ன கொக்கு சிறகடித்துப் பறக்கிறது.

நல்லூர்ச் சேனையின் ஆரவாரம் ஓயவில்லை சேனைத்தளபதி ஆணையிடுகிறான்... அதையடுத்து —

நந்திக்கொடி ஏந்திய குதிரைவீரன் முன்னே செல்ல, நல்லூர்சேனையின் இசையணிபோரிசை வெழுப்ப, மன்னன் படை மண்கோட்டை நோக்கி...

(வளரும்)

## ஞான சஞ்சீவி---

(4ஆம் பக்க தொடர்ச்சி)

அதிபதியான தெய்வாம்சம் விஷ்ணு விஷ்ணுவின் தொழில் காத்தல்.

சி என்ற எழுத்து தேயு (நெருப்பு) வைக் குறிக்கிறது.

இதன் வடிவியல் உருவம் முக்கோணம் பீஜ மந்திரம் 'றம்' நிறம் சிகப்பு. இதற்கு அதிபதியான தெய்வாம்சம் உருத்திரன் உருத்திரனின் தொழில் அழித்தல்.

வா என்ற எழுத்து வாயு (காற்று) வைக் குறிக்கிறது இதன் வடிவியல் உருவம் இரட்டை முக்கோணம் பீஜமந்திரம் 'யம்' நிறம் பச்சை இதற்கு அதிபதியான தெய்வாம்சம் மகேஸ்வரன் மகேஸ்வரனின் தொழில் மறைத்தல்.

ய என்ற எழுத்து ஆகாசத்தை (ஈதர்)க் குறிக்குறது இதன் வடிவியல் உருவம் வட்டம். பீஜ மந்திரம் 'உம்' நிறம் கருமை இதற்கு அதிபதியான தெய்வாம்சம் சதாசிவன் சதாசிவனின் தொழில் நலம் புரிதல்

இம் மந்திரங்களுக்கெல்லாம் மஹா மந்திரம். இதன் மகிமையை எங்கள் தேவாரம், திருவாசகம், திருவருட்பயன், திருவிசைப்பா, திருமந்திரம், உண்மை விளக்கம் ஆகிய திருமுறைகள் நன்கு எடுத்துரைக்கின்றன

"அஞ்செழுத்தால் ஐந்து பூதம் படைத்தவன் அஞ்செழுத்தால் பல யோனி படைத்தனன் அஞ்செழுத்தால் இவ் அகல் இடம் தங்கினன் அஞ்செழுத்தாலே அமர்ந்து நின்றானே" இவ்வாறு திருமந்திரம் கூறுகிறது.

பஞ்ச அக்ஷரம் நாலு வகைகளில் உச்சரிக்கப்படுகிறது. இவ்வுலகில் நலம் வேண்டுவதை அடைவதற்கு 'நமசிவாய' என்றும், மறு உலகில் எமக்கு நல்ல நிலையைப் பெறுவதற்கு 'சிவாயநம என்றும், இறைவனின் கருணை கடாட்சத்தைப் பெறவும், சித்துக்களைப் பெறவும், 'சிவயசிவ. சிவசிவ' என்றும், உச்சரிக்க வேண்டுமென திருமந்திரம் விளம்புகிறது.

☆

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எரியூட்டும் குண்டுத்தாக்கு: பாதுகாக்கச் சில மார்க்கம்

மாடி வீடுகளில், இரண்டாவது மூன்றாவது மாடிகளில் நீங்கள் அகப்பட்டிருப்பின் ஜன்னலினூடாகக் குதிக்க முயல்வது புத்திசாலித்தனமானதல்ல. இதற்கு உங்கள் அறையினுள் தீயினால் பாதிக்கப்படாதிருக்கும் கயிறுகளையோ, போர்வை, வேஷ்டி, சேலை போன்ற நீண்ட துணிகளையோ ஒன்றுடன் ஒன்று சேர்த்து நீளமாக முடிச்சிடவும். தயாரிக்கப்பட்ட இந் நீண்ட கயிற்றின் ஒரு முனையை அறையினுள் ஜன்னலுக்கு அருகாமையிலுள்ள உறுதியான பொருளொன்றுடன் இணைத்துக் கட்டிவிடவும் மறுமுனையை யன்னலூடாக வெளியே விடவும். இம்முறையின் போது கயிற்றினை வெளியே விடும் முனையானது நிலத்தைத் தொடுமளவு போதியதாக இல்லாவிடினும், நீங்கள் குதிக்க வேண்டிய பெருமளவு தூரத்தைக் குறைக்கக் கூடியதாக உள்ளது எனவே பாரதூரமான காயங்கள் ஏற்படுத்தாமல் நீங்கள் கீழ் தளத்தை அடையலாம். உங்கள் முடிச்சுகள் இடையே அவிழ்ந்து விடாமலோ, கயிறு அறுந்து விடாமலோ இருக்க வேண்டுமாயின் கயிற்றை முதலிலேயே இழுத்துப் பார்த்து உறுதியானதென நிச்சயமான பின்பே வெளியே விடவேண்டும்.

இதுவரை நீங்கள் எரியூட்டும் குண்டுவீச்சுகளின் போதும், அதன் பின்னரும் செய்யவேண்டியவற்றைப் பார்த்தீர்கள். தாக்குதல்களுக்கு முன்பே உங்கள் வீடுகளையோ, தொழிற்சாலைகளையோ, கடைகளையோ தீயின் அகாரத்திலிருந்து பாதுகாக்கு முகமாக சில முன்னேற்பாடுகளை செய்து வைப்பீர்களென்றால் விளையும் அனர்த்தங்களை பல மடங்கு குறைக்கலாம்

## பாதுகாப்பு முன்னேற்பாடுகள்

1) அனைத்துக் கட்டிடங்களினதும் கூரைகளிலிருக்கும் பழைய துணிகள், காகிதங்கள், குப்பை கூழங்கள் முதலியன முற்றாக அகற்றப்படுதல் வேண்டும் பெரிய மரங்களுக்கு அருகில் இருக்கும் கட்டிடங்களாயின் காய்ந்த இலைகள், சிறு கொப்புகள் முதலியன கூரைமேல் தேங்குவதற்கு வாய்ப்பு உண்டு இவற்றினை வாரம் ஒரு முறையாவது முற்றாக அகற்றிச் சுத்தம் செய்ய வேண்டும்.

2) கட்டிடத்தின் அனைத்து அறைகளும், முற்றங்களும், விறுந்தைகளும் எந்நேரமும் நன்கு துப்பரவாக இருக்க வேண்டும் அன்றைய தேவைக்குரியவற்றைத் தவிர வேறெந்த எளிதிற் தீப்பற்றக்கூடிய பொருள்களும் வெளியே இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்

## இறுதிப் பகுதி

குப்பை, கூளங்கள் அனைத்தும் கட்டிடங்களில் இருந்து தொலைவில் உள்ள உங்கள் வரையறுக்கப்பட்ட பிரதேசங்களினுள் சிறு கிடங்குகளில் இடப்பட்டு தினமும் எரிக்கப்படல் வேண்டும்

3) எளிதில் தீப்பற்றக் கூடியவாறுள்ள எந்த ஒரு அறையிலும் அத்தியாவசியமான பொருள்கள் இருப்பது தவிர்க்கப்படவேண்டும் இவை முக்கியமாக தொழிற்சாலைகள், கடைகள் முதலியவற்றின் சரக்கு சேமிப்பறைகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டியனவாகும்

4) கட்டிடங்களின் அதி உயரமான பகுதிக்கு வெளிப்புறத்தால் செல்லக்கூடியவாறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5) கதவு, ஜன்னல்களுக்கு தொங்கவிடப்பட்டுள்ள திரைச்சீலைகளை, எளிதில் தீப்பற்றுவதைத் தடை செய்யக் கூடிய கரைசல்களினுள் தோய்த்து உலர்ந்த பின்னர் தொங்கவிடவும் இதற்காக ஒரு கலன் நீருக்கு 9 அவுன்ஸ் போராக்ஸ் (BORAX) 4 அவுன்ஸ் போரிக் அமிலம் (BORIC ACID) இட்டு பெறப்பட்ட கரைசலையே உபயோகிக்கவும்.

6) கட்டிடத்தின் உத்தரங்கள், குறுக்குச் சட்டங்கள் போன்றவற்றுக்கும் தீப்பற்ற முடியாத கலவைப் பூச்சிடுக இதற்காக சுட்ட சுண்ணாம்பு 21 இறாத்தலும் ஒரு அவுன்ஸ் உறியுப்பும் நீரும் கலந்து பெறப்பட்ட கலவையை மூன்று பூச்சுக்களாக இடவும்.

7) தீயணைப்பில் ஈடுபடுவதற்காகவும், உள்ளே சிக்குண்டவர்களை மீட்பதற்காகவும் உங்கள் பகுதியில் சிறு குழுக்களாக அவற்றைப் பயில வேண்டும். அவர்கள் எந்நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும்

8) மண்ணெண்ணெய், பெற்றோல் போன்ற எரிபொருட்களை எளிதில் தீப்பற்றக் கூடிய பொருள்களில் இருந்து தொலைவில் வெகு பாதுகாப்பாக வைக்கவேண்டும் அவை சேமிக்கப்பட்டிருக்கும் இடமானது சுற்றுடலுடன் ஒப்பிடுகையில் சற்றுப் பள்ளமாக இருத்தல் விரும்பத்தக்கது.

9) நீர், மணல் போன்றவை உடனடியாகக் கிடைக்காத இடங்களில் அவற்றை சேகரித்து வைக்க வேண்டும் சேமிக்கப்பட்டிருக்கும் இடமானது எளிதில் அணுகக்கூடியதாகவும் இருத்தல் அவசியமானதாகும்.

10) எரிகாயங்களுக்குரிய முதலுதவி சிகிச்சைக்குத் தேவையான மருந்து வகைகள், கட்டுத் துணிகள் போன்றவை எந்நேரமும் தயார்நிலையில் இருத்தல் முக்கியமானதாகும்.

இதுவரை எரியூட்டும் குண்டுகளிலிருப்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை அறிந்த நீங்கள் தாக்குதல் நிகழும் வரை காத்திராது முன்கூட்டியே தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள்.

(முற்றும்)

# வாரியார் கலாநிதி---

(3ஆம் பக்க தொடர்ச்சி)
பவர்களும் இருக்கிறார்கள்.

இவர் வாழ்க்கை அற்புதத்திலும் அற்புதம்!; ஆனந்தத்திலும் ஆனந்தம்!; வேலூருக்கு அருகிலுள்ள காங்கேய நல்லூரில் ஸ்ரீ மல்லயதாஸ் பாகவதருக்கும் ஸ்ரீமதி கனகவல்லியம்மையாருக்கும் இரண்டாம் புதல்வராக தோன்றினார் வாரியார் அவர்கள்

1906ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21ந் திகதி தோன்றிய வாரியார் தந்தையிடம் புராணக் கதைகளைக் கற்றதுடன் அவர் பிரசங்கங்களையும் தவறவிடாது கேட்டு வந்தார். நற்றமிழ் நூல்களை நாளும் கற்று நாவன்மையில் நாவேந்தராக விளங்குகிறார்

கோபுரம் கட்டிக் கலசம் வைத்துக் கும்பாபிஷேகம் செய்வதுபோல் பிரசங்கத்தை விரிவாக ஆரம்பித்து மெல்ல மெல்ல அனுபவச் செய்திகளையும்ஆழ்ந்நுட்பங்களையும் ஆணிமுத்தான உவமை நயங்களையும் நகைச்சுவைக் கதைகளையும் சேர்த்தும் கோர்த்தும் சுவைபடப் பேசுவார்கள்

சொல்லாலே அழகிய கோபுரங்களைக் கட்டும் வாரியார் உண்மையான கோயில் கோபுரங்கள் பலவற்றைக் கட்டிக் கும்பாபிஷேகமும் செய்துள்ளார்.

திருப்புகழ் அமிர்தம் திங்கள் இதழை 35 ஆண்டுகளாக வெளியிட்டு அரிய பெரிய கட்டுரைகளை எழுதினார்

வடலூரிலிருந்து மேட்டுக் குப்பம் இரண்டு மைல். 1941 முதல் 1950 வரை வடலூரில் திருப்பணி செய்தார். ஒன்பது வருஷம் இருந்து அந்த ஊரிலே சத்திய ஞான சபைத் திருப்பணி செய்தார்.

மோகனூர் என்றொரு ஊர். கல்மகள் ஆசிரியர் கி. வா ஜ பிறந்த ஊர் இங்கு 1939ல் அருணகிரியார் பெயரில் அறச்சாலை ஒன்றை நிறுவினார் வாரியாரின் ஞான குரு அருணகிரிநாதர். அவர் தன்னைப் பற்றி ஒரு கட்டுரையில் பின்வருமாறு தெரிவிக்கின்றார்:-

எனக்கு ஒரு குரு இருந்தார். அவர் மதுரையில் வாழ்ந்தவர் அவர் சொன்னால் அப்படியே பலிக்கும் அவர் எங்கள் ஊர் காங்கேய நல்லூருக்கு வந்திருந்தார். 'சுவாமி! இங்கு அம்மன் கோவில் இருக்கிறது ஊர் சேமமாய் இல்லை அங்கே நீங்கள் வந்து மங்களாசாசனம் மாதிரி உங்கள் கையாலே தொட்டு ஏதாவது செய்யுங்கள்' எனக் கேட்டேன். அதற்கு எனது குருநாதர் பின்னப்பட்ட சுவாமியிடம் நான் ஏண்டா வரேன்? என்றார். ஆலயத்தைப் போய்ப் பார்த்தால் அம்பாளின் மூக்கு உடைந்திருந்தது அந்தமாதிரியான குருநாதரிடம் நான் குருகுல வாசம் பண்ணினேன். அதனால் தான் ஏதோ கடுகளவு ஞானம் பெற்றேன்'

வாரியார் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். அவர் முதன் முதல் வந்து பிரசங்கம் செய்த இடம் வல்வெட்டித்துறை அவர் கடைசியாக வந்து பிரசங்கம் செய்த இடம் கொக்குவில் பஞ்சவனப்பதி இடையில் ஈழத்தின் பல பாகங்களிலுமுள்ள ஆலயங்களில் சொற்பெருக்காற்றியுள்ளார். மலேசியா, சிங்கப்பூர் சென்றதுடன் பாரீஸ் முதலான மேற்கத்திய நாடுகளுக்கும் சென்று பிரசங்கம் செய்துள்ளார். வடநாட்டில் கல்கத்தா, பம்பாய் முதலிய மாநிலங்களில் கூடச் சொற்பொழிவைக் கேட்க மக்கள் திரண்டிருக்கிறார்கள்.

புராண, இதிகாச, இலக்கிய விவரங்களைத் துறைபோகக் கற்று சொற்பொழிவுகளில் சுவைபடச் சொல்கிறார். புதிய புதிய கோணங்களிலிருந்து பழைய பாடல்களின் ஆழத்தை விளக்கும்போது கூட்டத்தினர் குதூகலிப்பர்.

பழமை பழுத்த இப் புதுமையை இவர் வடிவில் கண்டு நாம் மகிழ்கிறோம்.

பாடலுக்கு விரித்து விளங்கப் பொருள் சொல்லும் பக்குவமும், அவற்றை நினைவிலே வைத்திருக்கும் திறனும், இரட்டுற மொழிந்து கூடி இருப்பவர்களை எல்லாம் இன்பத்திலாழ்த்தும் சிறப்பும் இவரது தனிப்பாணி.

மூவரும் தேவரும் போற்றும் முழுமுதற் கடவுள் முருகன். இகம், பரம், வீடு என்ற மும்மை நலன்களும் வழங்கும் தெய்வம் முருகவேள், இத்தகைய முருகப்பெருமானது அருள் பெற்ற முத்தமிழ் முனிவர் வாரியார் அவர்கள். நடமாடும் திருக்கோயிலாகத் திகழும் திருவருள் தவசீலர்.

மனம் வாக்குச் செயல் என்ற மூன்றும் ஒருமைப்பட்ட செந்தமிழ்ச் செல்வர். குணப் பெருங்குன்றாய் விளங்கும் இத் தமிழ்த் தவமுனிவர் பேசாத சபைகள் இல்லை. போகாத இடங்கள் இல்லை தொல்காப்பியம் முதல் பாரதி பாடல் வரை, தேவாரம் முதல் திருப்புகழ் வரை இவர் அறியாத நூல்களே இல்லை. எல்லாம் கற்றவர்; சகலகலா வல்லவர்; அனுபவஸ்தர்; சிந்தையள்ளும் சிம்மக்குரலோன். எல்லாம் அறிந்த இவரிடம் அறியாத தொன்றுண்டு அதுதான் பொய்ம்மை.

வாரியார் வாரி வாரி வழங்கும் தமிழ் அமிழ்தை கடந்த 35 வருடங்களுக்கு மேலாகக் கேட்டு, ரசித்துக் குறிப்பெடுத்து வைத்திருக்கும் நான் அவர் கற்கண்டுக் கருத்துக்களிலிருந்து சில வற்றை இங்கு தருகிறேன்.

## கந்தபுராணம்

கந்தபுராண நுண் பொருள் என்ன? சூரபன்மன் செய்நன்றி கொன்றான் அதனால் குலத்தோடு அழிந்து விட்டான். இந்தத் தத்துவங்களை முருகப் பெருமான் சிவபெருமானுக்கு உபதேசித்தாராம் சிவபெருமானுக்கு தெரியாததென்று அர்த்தமில்லை. சிவனே முருகன்; முருகனே சிவன் எப்போதும் அப்பாவை விட குழந்தைக்குப் பெருமையாக இருக்கும் என்று சொல்லி அதற்கோர் உவமை சொல்கிறார்.

வெண்ணெய் தானே நெய்? வெண்ணெயில் மணம் இருக்காது நெய் மணக்கும் என்று சொல்லும்போது சபாஷ் போடத் தோன்றுகிறது.

இராமாயண சாரம் என்ன?

ஆத்மா ராமர் ஆனந்தந்தான் சீதை. ஆனந்தமான சீதையைத் தேடிக் கொண்டு ஆத்மாராமர் போனார் மெய்யுணர்வே ஆனந்தத்தைக் கண்டு பிடிக்கிறது. மெய்யுணர்வு ஆஞ்சநேயர்.

### புல்லாங்குழல் வாசித்தவர் முருகனே

இசையிலே ஆகப் பெரியவர் சிவபெருமான். சிவபெருமான் வீணை வாசிப்பார்.

......'விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி' முதல் முதலிலே புல்லாங்குழல் வாசித்தவர் முருகப் பெருமான் கிருஷ்ணர் இல்லை. கிருஷ்ணர் காலம் 5000 ஆண்டுமுருகப்பெருமான் ஆதியும் அந்தமும் இல்லாதவர். திருமுருகாற்றுப்படையிலே, 'குழலன் கோட்டன் குறும்பல்லியத்தன்' என வருகிறது.

வல்லினம் என்றால் ஆண்கள். மெல்லினம் என்றால் பெண்கள். இடை இனம் என்றால் குழந்தை அதுதான் பரமசிவம், பார்வதி, மத்தியில் முருகன், சோமாஸ் கந்தர்.

வடக்கே விவேகானந்தர் இருந்தார். கன்னியா குமரியிலே தானே ஞானம் வந்தது. உலகம் தெரிந்த வரலாறுதானே. அவர் இருந்த இடத்துக்கு ஏழு லட்சம் செலவழித்தார்கள். ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், சங்கரர், ராமானுஜர், மத்வாச்சாரியார் கம்பர் எல்லோரும் தெற்கேதான் அவதாரம் செய்தார்கள். வடக்கே ஒரு ஞானசாரியன் பிறந்தான் என்று இதுவரைக்கும் வரலாறு கிடையாது.

(வளரும்)

# சிவாஜிக்கு கலாநிதி. .

(3ஆம் பக்க தொடர்ச்சி)
உருவானது.

சென்னையில் சுயமரியாதை மாநாடு சிரும் சிறப்புமாக நடந்து முடிந்தது. இரவில் 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' நாடகம்

சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட மாவீரன் சத்திரபதி சிவாஜியே மீண்டும் உயிர்பெற்று எழுந்து வந்ததுபோல் இருந்தது நாடகத்தைப் பார்ப்பவர்களுக்கு.

ஆரவாரக் கைதட்டலால் அரங்கமே அதிர்ந்தது.

## பெரியாரின் ஆசி

இறுதியில் தந்தை பெரியார் பேசினார்:

"நான் இந்த மேடையில் வி. சி. கணேசன் என்ற நடிகனைப் பார்க்கவில்லை; மராட்டிய வீரன் சிவாஜியைத் தான் பார்த்தேன்,' என்று கூறிய பெரியார் கணேசன் பக்கம் திரும்பி அவரைத் தம் அருகே அழைத்து—

"தம்பி கணேசா! உன் நடிப்பில் மெய்மறந்து போனேன்! இன்று முதல் நீ சாதாரண கணேசன் இல்லை! சிவாஜி கணேசன்! எதிர்காலத்தில் உன் புகழ் பாரெங்கும் பட்டொளி வீசிப் பறக்கத்தான் போகிறது!" என்று பாராட்டினார் கணேசனை.

விழுப்புரம் சின்னையா கணேசன் அன்று முதல் சிவாஜிகணேசன் ஆனார்

## ✶ திரையுலகில்

1952 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு புதிய சகாப்தம் படைத்தார் சிவாஜி.

அந்த ஆண்டில்தான் சிவாஜியின் முதல் திரைப்படமான "பராசக்தி" வெளியானது.

அன்று முதல் தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் சிவாஜியின் சிம்மக்குரல் ஒலிக்கத் தொடங்கியது.

"பராசக்தி" படம் தமிழ்ப்படவுலக வரலாற்றில் மட்டுமல்லாமல், சிவாஜி கணேசனின் வாழ்க்கையிலும் ஒரு திருப்புமுனையை உருவாக்கிற்று.

ஆம். 1952ஆம் ஆண்டு மே மாதம் முதல் திகதி தம் உறவுக்காரப் பெண்ணான கமலாவைத் திருமணம் செய்து கொண்டார்.

அதிலிருந்து அதிஷ்ட தேவதை அவரை அணைத்துக் கொண்டாள்.

அவரின் அனேக படங்கள் வெற்றி அடைந்தன. வசூலில் சாதனைகள் புரிந்தன பட்டங்களும் விருதுகளும் பதக்கங்களும் வந்து குவிந்தன

அதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைக்குமாப் போல் இந்திய அரசின் அதி உயர் விருதுகளில் ஒன்றான 'பத்மஸ்ரீ' விருதும் அவருக்குக் கிடைத்தது.

## அரசியலில்

அரசியலையும் அவர் விட்டு வைக்கவில்லை. ஆரம்பத்தில் திராவிடர் கழகத்திலும் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் இருந்த அவர், கழகத்தின் நாத்திகக் கொள்கையில் நம்பிக்கை இழந்த பின்னர் காங்கிரஸில் சேர்ந்து அன்று தொட்டு இன்றுவரை காங்கிரஸ் தொண்டனாக பணிபுரிந்து வருகிறார்

இந்திய அரசு இப்பொழுது அவருக்கு ராஜ்ய சபா எம். பி. பதவியைக் கொடுத்துக் கௌரவித்துள்ளது.

தமிழ்த் திரையுலகும் அவரைக் கௌரவிக்கத் தவறவில்லை அது நடிகர் திலகத்தின் கலைச் சேவையைக் கௌரவித்து 1 - 10 - 1986 அன்று சென்னையில் பொன்விழா கொண்டாடியது.

முன்னூறு படங்களைக் கிட்டிவிட்ட 'படிக்காத மேதை' சிவாஜி கணேசன் நாடகவுலகிலும்—அரசியலிலும் எண்ணிலடங்காத சாதனைகளைப் புரிந்துள்ளார்

அந்தப் படிக்காத மேதையை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் கௌரவகலாநிதிப் (டாக்டர்) பட்டம் வழங்கி கௌரவிக்கவிருப்பது பொருத்தம் அல்லவா! ✶

# யுத்த முனைகளில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
களுக்கும் பிரியலானார்கள் நிதானப் பயன்படுத்திய எதிரிகளான குறைஷியர்கள், வேறு பாதைகளால் வந்து முஸ்லிம்களை நிலைகுலையும் வரை மும்முரமாக தாக்கினார்கள்.

நபியவர்களையும் எதிரிகள் சூழ்ந்து கொண்டார்கள். 'நான் அல்லாஹ்வின் நபியாக இருப்பதால் நான் தோல்வி அடைய முடியாது' என உறுதியாகக் கூறி நிலைகுலைந்த முஸ்லிம் படைவீரர்களைக் கூவி அழைத்தார்கள் நபியின் குரல் கேட்ட முஸ்லிம் படைவீரர்கள் அவர்களைச் சூழ்ந்து எதிரிகளை விரட்டினார்கள்.

இதில் பல முக்கிய முஸ்லிம் தளபதிகள் கொலை செய்யப்பட்டார்கள் இதற்கான காரணத்தையும் அல்குர்ஆன் விளக்குகின்றது நபியின் கட்டளையை மீறியதால் முஸ்லிம்களுக்கு ஆரம்பத்தில் தோல்வியைக் கொடுத்தோம் என அல்குர்ஆனில் விவரிக்கப்படுகிறது.

இது யுத்தத் தளபதியின் கட்டளையை மீறுவோருக்கு ஏற்படும் முடிவு என்பதை முஸ்லிம்களுக்கு ஒரு படிப்பினையாகக் காட்டப்பட்டதாக நபிகள் நாயகம் குறிப்பிட்டார்கள் இறுதியில் முஸ்லிம்கள் தோல்வியிலிருந்தும் காப்பாற்றப்பட்டார்கள்.

அதன் பின்னர் கிறிஸ்தவர்கள், யூதர்கள், குறைஷியர்கள் ஒன்றிணைந்து முஸ்லிம்களுக்கு தார்கள். அதற்தும் நபியவர்களே தலைமை தாங்கினார்கள் இதிலும் எதிரிகள் தோல்வியடைந்தார்கள். இதன் பின்னர் நபிகள் நாயகத்தின் காலத்தில் ஏற்பட்ட பல யுத்தங்களிலும் எதிரிகள் தோல்வி கண்டனர்

கி பி 630ல் நபியவர்களுக்கு துன்பம் இழைத்த, துரத்திய மக்கா நகர், எவ்வித எதிர்ப்புமின்றி நபியவர்களின் தலைமையில் கைப்பற்றப்பட்டு. அப்துல்லாஹ புனித மாக்கப்பட்டது ஏகத்துவத்தை நிலை நிறுத்தும் இடமாக அது உறுதிப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து முழு அரேபியத் தீபகற்பமும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டது.

உரோம, பாரசீக பேரரசர்களுக்கும் இஸ்லாத்தின் தூதை நபியவர்கள் அனுப்பினார்கள் சிலர் ஏற்றனர் பலர் எதிர்ப்புக்களைத் தெரிவித்ததுடன் யுத்தத்திற்கும் தயாராகினர். காலப்போக்கில் உரோம, பாரசீக சாம்ராச்சியங்களின் பெரும்பகுதியும் குறுகியகால எல்லைக்குள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட வரலாற்றை நாம் காண்கின்றோம்.

இவ்வெற்றிகள் மனித குல உயர்வுக்கும், நேர்மைக்கும், உண்மைக்கும் கிடைத்த வெற்றியாகும். இவற்றின் பின்னணியிலே முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கருணையுள்ளமும் இறையருளும் பிணைந்துள்ளது ✶

# நிழலும் நிஜமும் . . . . .

(3ஆம் பக்க தொடர்ச்சி)
டேனு?

அன்றைக்கு நான் இந்த வீட்டை விட்டுப்போகும் போது இந்த மாமரம் ஒரு சின்னக் கன்றாக நின்றது, இந்த நாலரை வருடத்தில் எப்படி வளர்ந்து பூத்துக்குலுங்கி நிற்கிறது இந்தத் தென்னம்பிள்ளை, நான், என் கையாலேயே நட்டது. இன்றைக்குப் பாளை தள்ளி புதுமணப் பெண்போல நிற்கிறது. என் நிலைமையை நினைக்கும்பொழுது பொங்கி வரும் கண்ணீருக்கு அணைபோட முடியவில்லையே! அன்றைக்கு என்னைக் கைப்பிடித்தவரோடு இந்த வீட்டை விட்டுப் போனவள், இன்றைக்கு அவரோடு வாழ்ந்த இன்ப வாழ்வின் நினைவுகளோடும், அதன் பலனாய் என் வயிற்றில் உதித்த மகன் இந்தக் கண்ணனோடும், அவரைப் பறிகொடுத்து விட்டு அபலையாக இப்படி வந்து நிற்கிறேனே

இப்படித்தான் அன்றைக்கு நான் வீட்டை விட்டுப் போனபோதும் அப்பாவும் அம்மாவும் தங்கச்சி லலிதாவும் கண்ணீர் விட்டார்கள். அன்றைக்கு அது ஆனந்தக் கண்ணீர். ஆனால் சென்ற வாரம் எல்லாம் முடிந்து என் அன்புத் தெய்வத்தைச் சுட்டுச் சாம்பராக்கிய பின், ஏதோ ஒரு வெறியில் என் அவரைப் பெற்ற தாய் — என் மாமியின் கெஞ்சுதலையும் பொருட்படுத்தாமல் உதாசீனம் செய்து பிடிவாதமாக அப்பாவுடன் கையில் இந்தக் கண்ணனையும் ஏந்திக் கொண்டு இந்த வீட்டு வாசலை மிதித்த போதும் கூட அம்மாவும் அப்பாவும் தங்கச்சி லலிதாவும் அழத்தான் செய்தார்கள்.

ஆனால்... நான் அழவில்லை. காரணம் என் கண்களில் கண்ணீர் வற்றிவிட்டது. ஏதோ ஒரு உணர்வு என் மனதை வைராக்கியம் நிறைந்ததாக்கி விட்டிருந்தது. அயலவர்கள் வந்தார்கள் அடிக்கடி வந்தார்கள் ஏதோ புது மணப் பெண்ணைப் பார்க்க வருபவர்கள் போல,முகத்தில் போலித் துக்கத்தை வரவழைத்துக்கொண்டு அவர்கள் அவரின் மறைவைப்பற்றிப் பேசிக் கொண்ட போதெல்லாம் என்னுள் ஏதோ வெறி பொங்கி எழுந்ததை உணர்ந்தேன்.

கஷ்டப்பட்டு என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டேன். நானும் என் மகனும் அவர்களுக்குக் காட்சிப் பொருட்களாய் இருந்து இப்போது ஒரு வாரம் ஓடி மறைந்து விட்டது

தங்கச்சி லலிதா தன் அக்காளுக்கு ஏற்பட்ட அவலநிலைக்காகத் தனக்குள் குமுறி அழுதாள். அம்மா ஏற்கனவே ஹிஸ்டீரியா நோயாளி. எனக்கு ஏற்பட்ட பேரிடியால் நடைப்பிணமாகவே ஆகிவிட்டாள்.

அப்பாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம் மூத்தபிள்ளையான என் மீது அவருக்கு எப்போதுமே அலாதியான பிரியம். வருகிறவர்கள், போகிறவர்கள் எல்லோரிடமுமே எனக்கு நேர்ந்த சோதனையைச் சொல்லிச் சொல்லி மனம் குமுறினார். யார் அழுது என்ன பயன்? போனவர் திரும்பியவர் வரப் போகிறாரா?ஒரு நாளும் இல்லாதவாறு நான் தடுக்கத் தடுக்க டிராக்டரை எடுத்துக்கொண்டு போனாரே! அவரைக் காலன் தான் அப்படி அழைத்திருப்பானோ? அவருடன் நான் போராட்டமான, ஒரு பூரண திருப்தியில்லாத வாழ்க்கைதான் வாழ்ந்தேனென்றாலும் இந்த நாலரை வருட வாழ்க்கையிலும் எனக்கு ஒரு துணையாகவல்லவா இருந்தார்.

திடீரென்று கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது மாதிரி, சொல்லாமல் கொள்ளாமல் என்னைத் தவிக்கவிட்டு விட்டுப் போய் விட்டாரே. அந்த விபத்தைப்பற்றி யாரோ ஓடி வந்து சொன்னதைக் கேட்டதுமே நான் மயங்கி வீழ்ந்து விட்டேனாம். அந்த மயக்கம் அடுத்த நாள் தான் தெளிந்தது.

கண்ணைத் திறந்து பார்த்தால் அவர் இறுதி ஊர்வலம் புறப்படத் தயாராகிக் கொண்டிருக்கிறார். உறவினர்கள் எல்லோரும் ஒருவர் கூடத் தவறாமல் அவரை வழியனுப்ப வந்திருக்கிறார்கள்.

அதோ அப்பா,அம்மா, தங்கச்சி, மாமா, மாமி, என் கண்ணன்... எல்லோரும் கண் முன்னால் தட்டாமாலை சுற்றுகிறார்கள். நான் மட்டும் இப்படிப் படுக்கையில் படுத்துக் கிடந்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற நினைவில் எழுந்திருக்க முயல்கிறேன். முடியவில்லையே... தலையைச்சுற்றுகிறதே!... இதற்குள் மற்றவர்கள் என்னைத்தாங்கி மீண்டும் படுக்கையில் கிடத்துகிறார்கள்

எல்லாம் ஒருவாறு முடிந்து விட்டது. அவரைச் சுட்டுச் சாம்பராக்கிக் கடலில் கரைத்து... அவர் பிறந்து வளர்ந்து, என்னை மனையாளாய்க் கொண்டு சென்று வாழ்ந்து, என் கண்ணன் பிறந்து வளர்ந்து, தவழ்ந்த வீடு மட்டுமே வெறிச்சோடிக் கிடக்கிறது. அதில் நடைப்பிணங்களாக என் மாமாவும் மாமியும்... பெரும்பாலும் ஒருவரோடு ஒருவர் பேச்சு வார்த்தை கூட இன்றி உலாவுகிறோம்.

எனக்கு அந்த வீட்டில் இருக்கும் ஒவ்வொரு கணமும் அவரின் நினைவே மனதில் எழுந்து தடுமாற வைக்கிறது. அவர் என்னோடு உரையாடுவதாக, என்னைக் கேலி செய்து நகைப்பதாக ஒரு பிரமை. நெஞ்சிக் கூத்தாடி அப்பாவிடம் அனுமதி பெற்று அப்பாவுடன் புறப்பட்டு இங்கு வந்து விட்டேன்.

மனது ஒரு நிலையில் இல்லாதவரையில் புறச் சூழ்நிலைகளின் பாதிப்பு எதையுமே உணர்ந்து கொள்ள முடியாதென்பதை எங்கோ படித்திருக்கிறேன். அது இப்பொழுது அனுபவரீதியில் எவ்வளவு உண்மை என்பது விளங்குகிறது.

நடந்ததென்னமோ நடந்து விட்டது. இனி ஒருவாறு மனதைத் தேற்றிக் கொள்வதைத் தவிர என்ன செய்துவிட முடியும்.?

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மில்க்வைற் செய்தி 131**

10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தி 131 ஐப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

# சஞ்சீவி

15 - 11 - 1986 சனிக்கிழமை

**நுளம்பு குத்துகிறதா?**

பொன்னின் குழல் ஊதிவந்து உங்கள் பொன்னுன மேனியில் ஊசிபோடுகிறதா? ஒன்று செய்யுங்கள் சாம்பிராணி புகைப்பது போல, மில்க்வைற் நீம் தூபத்தைப் புகைத்துப்பாருங்கள்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

# நந்திமலை போகும் ஆண்டி கொண்டு வருவாரா தோண்டி?

நந்திமலை உபதேசம் நாளை நண்பகல் பந்தியுடன் நடைபெறப் போகிறது.

பெங்களூரில் ஆயிரம் மீட்டர் உயரத்தில் உள்ளது நந்தி மலை. ஆங்கிலத்தில் ''நந்தி ஹில்ஸ்'' (Nandi Hills) என்று அழைக்கப்படுகின்றது.

மலையின் உச்சியிலே 'கபன் ஹவுஸ்' (Cubbon House) பங்களா.

இந்த நந்திமலை பங்களாவில் தான் 1961 இல் எலிஸபெத் மகாராணியார் தங்கினுர்.

மைசூர் திவானுக இருந்த மேர்ஸா இஸ்மாயிலின் அழைப்பை ஏற்றுஅண்ணல் காந்திஜி நந்திமலை பங்களாவில் ஒருமுறை தங்கி இருந்தார்.

அதன் காரணமாக நந்திமலையில் உள்ள விடுதிகள் தொகுதிக்கு 'காந்தி நிலையம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

பெங்களூரில் இருந்து 55 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது நந்திமலை பங்களா.

'சார்க்' உச்சி மாநாட்டுக்கு பெங்களூர் செல்லும் தலைவர்கள் தங்கப் போவது 'வின்ஸர் மனேர்' என்ற பங்களாவில்.

நந்திமலை பங்களாவில் நாளை நண்பகல் விருந்து அளிக்கப்படவுள்ளது. அந்தப் பந்தியில் 'சார்க்' மாநாட்டுத் தலைவர்கள் ஏழு பேரும் கலந்து கொள்ள இருக்கின்றனர்.

அப்போது தான் இலங்கை அதிபருடன் பாரதப் பிரதமர் பேசப் போகிறுர்.

**நந்திக் கொடி**

இலங்கைத் தமிழர் நந்திக் கொடிக்கும் முக்கியத்துவம் கொடுத்த காலம் ஒன்று உண்டு.

அந்தத் தமிழரின் இன்றைய ஜீவமரணப் போராட்டத்துக்கு நந்திமலை உபதேசம் முற்றுப் புள்ளி வைக்குமா?

இன்று பெங்களூர் சென்றடையும் இலங்கை அதிபர், அவரை வரவேற்க பெங்களூர் விமான நிலையத்தில் காத்து நிற்கும் பாரதப் பிரதமர் — இவர்களின் வாய் அசைவுகளை எதிர் பார்த்து உலகத் தமிழர் இதயங்கள் படபடக்கின்றன.

நந்திமலைச் சந்திப்புக்கு வழிவகுக்கும் நடவடிக்கையாக கடந்த சில தினங்கள் இடம்பெற்ற, இடம்பெற்று வரும் சம்பவங்களைப் பார்த்தால் பெங்களூர் பேச்சுக்கள் எப்படி முடியும் என்பதை ஓரளவு ஊகிக்க முடிகின்றது.

**டிக்ஸிற்**

19 தினங்களைப் புதுடில்லியில் கழித்துவிட்டு கொழும்பு திரும்பிய இந்தியத் தூதர் டிக்ஸிற் ஜனுதிபதி ஜெயவர்த்தனுவை இரண்டு தடவைகள் சந்தித்தார்.

இரண்டாவது சந்திப்பைத் தொடர்ந்து, சனிக்கிழமை புதுடில்லி திரும்புவதாக முன்னர் திட்டமிட்டிருந்த திரு. டிக்ஸிற் மூன்று தினங்கள் முன்னதாகவே (புதன்) புதுடில்லிக்கு அவசரமாகப் பயணமானுர்.

ஏன் இந்த அவசரக் கோலம்? என்பதைப் பின்னர் சென்னை மாநகரில் நடந்த சம்பவங்கள் நன்ருகப் புலப்படுத்தின.

'போராளிகள் ஆயுதங்களுடன் 100 மைல் தொலைவில் உள்ள சென்னைமாநகரிலே திரிகின்ருர்கள்; எப்படி நான் பெங்களூர் வருவது? நான் வர முடியாது. பிரதமரைப் பதிலாக அனுப்புகிறேன்' — இப்படித் தர்மிஷ்டர் சொன்னதால் தான் சென்னைநகரில் போராளிகள் கைது, ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமை ஆகிய சம்பவங்கள் — இப்படி கொழும்பு வட்டாரங்கள் கூறின.

**இரட்டை முனை வாள்**

தர்மிஷ்டர் கொடுத்த சந்தர்ப்பத்தை இந்திய ராஜதந்திரம் இரட்டை முனை வாளாக (Double-Edged Blade) நடவடிக்கையாகப் பயன் படுத்தியதா? என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது.

சூளைமேட்டுச் சம்பவம் தமிழ்நாட்டுத் தமிழர் மத்தியில் ஏற்படுத்திய புகைச்சலை அடக்கவும் இச்சந்தர்ப்பத்தை இந்தியா பயன்படுத்தியதா?

போராளிகளைப் பேச்சுக்களுக்குக் கொண்டு வர இந்தியா நிர்ப்பந்தித்தது என்ற எண்ணத்தை உலக வட்டாரங்களில் ஏற்படுத்தவும் இச்சந்தர்ப்பத்தை இந்தியா பயன்படுத்தியதா?

இந்தக் கேள்விகளிலும் உண்மை இல்லாமல் இல்லை. இப்படி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன;

இச்சூழ்நிலையில் ராய்ட்டர் செய்தி ஸ்தாபன அறிக்கை ஒன்று மேலும் சில உண்மைகளை வெளிப்படுத்தி உள்ளது.

''போராளிகளை நிராயுதபாணிகளாக்கியது தான் எம்மால் ஆகக் கூடுதலாகச் செய்யக் கூடியது; ஆகக் குறைந்ததாக இதனை எடுக்கக் கூடாது.

''இனி இலங்கை அரசின் கையில்தான் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது தங்கியுள்ளது.

''சமஷ்டி அரசமைப்பை ஓரளவு கொண்டதாக வடக்குடன் கிழக்கில் உள்ள தமிழ்பேசும் பகுதிகளை இணைத்து ஒரு தாயகத்தைத் தமிழருக்கு கொடுக்க வேண்டும்''

இப்படி இந்திய அதிகாரபூர்வ வட்டாரம் தெரிவித்ததாக அந்த ராய்ட்டர் செய்தி ஸ்தாபன அறிக்கை தெரிவித்துள்ளது.

தாயகம் ஒன்று தேவை என்பதில் தமிழ்ப் போராளித் தலைவர்கள் உறுதியாகநிற்கின்றனர்.

சென்னையில் இருந்து பறந்து சென்று பிரதமர் காந்தியிடம் இப்படித் தெரிவித்திருக்கிறுர் தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன்.

நந்திமலை உபதேசம் எப்படி அமையக் கூடும் என்பதை ராய்ட்டர் அறிக்கை, முதலமைச்சரின் சந்திப்பு ஆகியன ஓரளவு எடுத்துக்காட்டுகின்றன.

டாக்கா பேச்சுக்களின் பின்னர் இடக்காக நடந்து கொண்ட தர்மிஷ்டர், நந்திமலை சந்திப்பின் பின்னர், இந்தியாவுடன் சேர்ந்து உருவாக்கிய தோண்டி (உருப்படியான அரசியல் தீர்வு) எதையும் கொண்டுவருவாரா? அப்படிக் கொண்டு வந்தாலும் —

''நந்தவனத்திலோர் ஆண்டி — அவன்
நாலாறு மாசமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி — அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி''

என்ற நிலை ஏற்படாமல் நடந்து கொண்டால் 1987 க்கு என்று ஒதுக்கப்பட்ட ஆயிரம் கோடி ரூபாவை மிச்சம் பிடிக்கலாம் அல்லவா!

**உள்ளும் புறமும்** — குறுமுனி

**இன்று நடப்பவை**

### பழைய மாணவர் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் மறுசீரமைக்கப்பட்ட யாப்பை அங்கீகரிப்பதற்கான விசேட பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். (உ)

### கூட்டங்கள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 15

மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட தினமான இன்று வடக்கு கிழக்கு பகுதிகளில் ஈழவர் முன்னணியின் ஏற்பாட்டில் பல பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன. (உ-10)

### நிகழ்ச்சிகள் ரத்து!

யாழ்ப்பாணம், நவ. 15

தமிழர் கலாசார அவையின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் கவின் கலை அரங்கத்தின் இவ்வார நிகழ்ச்சிகள் ஒத்திப் போடப்பட்டுள்ளன.

இன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாகவே இவ்வார நிகழ்ச்சிகள் ஒத்திப் போடப்பட்டுள்ளதாகவும் மீண்டும் மறுவாரம் வழமைபோல் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் எனவும் அவை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-10)

### திரிபாதி ராஜினுமா!

புதுடில்லி, நவ. 14

இந்திரா காங்கிரஸ் கட்சியில் செயலாற்றுத் தலைவர் பதவியில் இருந்து திரு. கமலபதி திரிபாதி ராஜினுமாச்செய்து விட்டார்.

82 வயதான கமலபதி திரிபாதி பிரதமர் ராஜீவ் காந்தியின் விருப்பத்துக்கு இணங்கவே ராஜினுமாச் செய்திருக்கின்ருர்.

இந்திரா காங்கிரஸ் கட்சியைப் புனரமைப்புச் செய்வதற்காக இவரை ராஜினுமாச் செய்யுமாறு பிரதமர் கோரியிருந்தார் (உ-எ)

# ஈரானுக்கான ஆயுத விற்பனை விவகாரம்
## றேகனுக்கு மற்ருெரு பேரிடி

சர்வதேச அரங்கில் இந்த வாரம் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களில் ஒன்று ஈரானுக்கான அமெரிக்க ரகசிய ஆயுத விற்பனை அம்பலமானது ஆகும்.

கடந்த நான்காம் திகதி அமெரிக்காவில் நடந்த இடைக்காலத் தேர்தல்களில் அமெரிக்க மேல் சபையான செனட் சபையையும் கோட்டைவிட்டு 'நொண்டிவாத்து' நிலையில் உள்ள அதிபர் றெனுல்ட் றேகனுக்கு அம்பலப்படுத்தி இருக்கிறது.

**வாட்டர் கேட்**

முன்னுள் ஜனுதிபதி நிக்ஸனின் 'வாட்டர் கேட்' ஊழல் விவகாரத்துக்குப் பின்னர் அமெரிக்க அதிபர் ஒருவருக்கு ஏற்பட்டுள்ள பெரும் அபகீர்த்தியாக இந்த ரகசிய ஆயுத விற்பனை விவகாரம், கருதப்படுகிறது.

'வாட்டர்கேட்' விவகாரம் உள்ளூரில் மட்டும் நிக்ஸனுக்கு தலையிடியை ஏற்படுத்தியது. ஆனுல் ஒரு பணயக் கைதிகள் விவகாரமே அமெரிக்காவையும் ஈரானையும் நெருங்கிவரச் செய்திருப்பதாக நம்பப்படுகிறது.

லெபனுனில் தற்போது அமெரிக்கர்கள் சிலர் ஈரான் சார்பு மதக் கோட்பாளர் குழு ஒன்றினுல் பணயமாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர்.

பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு பண்டமாற்ருகவே அமெரிக்கா ஈரானுக்கு ஆயுதங்களை அனுப்பி வைத்திருப்ப

**உலக உலா** — என்.பி.சீலன்

இது மற்ருெரு பெரும் தாக்கம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கடந்த புதன்கிழமை அமெரிக்க கீழ்ச்சபை — மேல்சபை (காங்கிரஸ் — செனட்) உறுப்பினர்களை வெள்ளை மாளிகைக்கு அழைத்து ஈரானுக்கு ரகசியமாக ஆயுதம் அனுப்பியது உண்மை தான் என்று அதிபர் றேகன் ஒப்புக் கொண்டார்.

சமீபத்தில் அமெரிக்க தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகர், ரொபர்ட் மக்கோவன் தலைமையிலான குழு ஒன்று ஈரானுக்கு நட்புக்கரம் நீட்டும் நோக்கத்துடன் தலைநகரான தெஹ்ரான் சென்றது.

அதுசமயம் விமான நிலையத்தில் வைத்தே ஈரானிய அதிகாரிகளால் இக்குழு திருப்பி அனுப்பப்பட்டது.

அமெரிக்காவின் கௌரவத்துக்கு பெரும் களங்கம் ஏற்படும் விதத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் பெரும் கொந்தளிப்பை உருவாக்கியது.

இந்த விவகாரம் தொடர்பான சார்ச்சையே அதிபர் றேகனின் ஆயுத விற்பனைக் குட்டையும் தற்போது தற்போதைய விவகாரம் உள்ளூரில் மட்டும் அன்றி வெளிநாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

அமெரிக்காவின் நேச நாடுகள் அமெரிக்காவை சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையை ஈரானுக்கான அமெரிக்க ரகசிய ஆயுத விற்பனை ஏற்படுத்தி இருக்கிறது.

எனினும் றேகன் உண்மையை ஒப்புக் கொண்டது வரவேற்கத்தக்கதே.

ஈரானில் ஷா மன்னர் ஆட்சியில் இருக்கும் வரை அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடுகளில் ஒன்ருக ஈரான் இருந்து வந்தது.

ஈரானிய புரட்சியின் போது ஷா மன்னர் மயிலாசனத்திலிருந்து கவிழ்க்கப்பட்டதைஅடுத்து அமெரிக்காவின் எதிரி நாடாக ஈரான் மாறியது.

புரட்சியின் பின்பு தெஹ்ரானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முற்றுகையிடப்பட்டு சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக அமெரிக்கர்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்ட சம்பவம் அமெரிக்க — ஈரான் உறவை மேலும் மோசமாக்கியது.

தற்போது மீண்டும் தாக ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

இதனை அமெரிக்க அதிபர் றேகனும் ஐ. நாவில் உள்ள ஈரானிய தூதுவர் ரஜாவி கொரசானியும் மறுத்துள்ள போதிலும் பணயக் கைதிகள் விவகாரமும் ஆயுத விநியோகமும் கிட்டத்தட்ட சமகாலத்தில் நிகழ்ந்திருப்பது சர்வதேச மட்டத்தில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ஈரானிய மதத் தலைவர் ஆயதுல்லா கொம்மேனியின் காலத்துக்குப் பிறகு ஆட்சிக்கு வரக்கூடிய மிதவாதிகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கே இந்த ரகசிய ஆயுத விற்பனை என்று அதிபர் றேகன் தற்போது நொண்டிச் சாட்டுக் கூறுகிருர்.

ஈரானுக்கு ஆயுதம் அனுப்புவதை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் சூல்ட்ஸும் பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வைன்பேகரும் கடுமையாக எதிர்த்து வந்தனர்.

இந்த ஆயுத விற்பனை தற்போது பகிரங்கமாக்கப்பட்டிருப்பதால் அமெரிக்க அரசியலிலும் இது தாக்கத்தையே ஏற்படுத்தும்.

## எய்ட்ஸ்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெட்டூரத்தால் அழியும் தமிழினம், 'எய்ட்ஸ்' மூலமும் அழிந்துவிட இடமளிக்கலாமா?

இது விடயத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள வைத்திய நிபுணர்களும், சமூக, தொண்டர் இயக்கங்களும் 'எய்ட்ஸ்' தடுப்புக்கான திட்டத்தை இப்போதே முன்யோசனையுடன் தயாரித்துச் செயற்படுத்துவது அவசியம்.

## தொண்டம...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மையை விளக்கினர்.

''கைதான ஆண்கள் முகாமில் இருக்கின்றனர். விடுவிப்போம்'' — என்று கூறி பெண்களைக் சுடற்கரைப் பக்கமாக இராணுவத்தினர் அழைத்துச் சென்றனராம்.

அந்தச் சமயம் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்படவே, இராணுவத்தினர் பெண்களைத் திரும்பிச் செல்லுமாறு கூறி விட்டனர். (உ-எ-160)

**நீத்தார் பட்டியல்**

### ஞானப்பிரகாசம் தேவசகாயம்
(சிங்கராசா)

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் தேவசகாயம் (சிங்கராசா) அகால மரணமானுர். இவர் மாக்றெட்டின் அன்புக் கணவரும், அன்ரனிராசா, கியூபேட்ராசா (டென்மார்க்) ரெபேட்ராசா, எட்வேட்ராசா, கிறிஸ்ரின்ராசா, மேரியூலிற்ரா, மேரிவிறிசிற்ரா, மேரிஜெனிற்ரா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னுரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக இன்று 15-11-1986 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கோப்பாய் தெற்கு ''லிங்கவாசா'' இல்லத்திலிருந்து சென் மராக்கண் மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

## வல்லையில் காயமுற்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் இராணுவத்தினர் நின்றதைக்கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

உடனே விரைவாக சைக்கிளைச் செலுத்த முயன்றேன். அச்சமயம் சிப்பாய்கள் என்னை நோக்கிச் சுட்டனர். காலில் சூடு பட்டது.

அந்த இடத்தில் விழுந்த நான் தவழ்ந்தபடி சிறிய கோவில் ஒன்றை அடைந்தேன்.

கோவில் கட்டடத்தினுள் மறைந்து கொண்ட நான் இரத்தம் பெருக்கெடுத்ததால் மயக்கமடைந்து விட்டேன். நண்பகல் சுயஉணர்வு திரும்பி வந்தது.

மனித நடமாட்டமே அப்பகுதியில் தென்படவில்லை. குண்டுச் சத்தங்கள், துப்பாக்கிச் சத்தங்கள் ஆகியன தான் கேட்டன.

நடக்க முடியாத நிலையில் ஆலயத்தில் நான்கு நாட்கள் இருந்த என்னை அந்த வழியால் வந்த ஒருவர் போராளிகளின் உதவியுடன் காப்பாற்றினுர்.

இப்படி அவர் சொன்னுர்.

திரு. இராமையா வல்வெட்டித்துறையில் உள்ள தேநீர்க்கடை ஒன்றில் பணியாற்றி வருகிருர். இவர் மலையகத்தைச் சேர்ந்தவர். (உ-எ-119)

## லண்டனில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன.

வேறு ஆறுபேர் அதிர்ச்சிக்கு ஆளாகிய நிலையில் திக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் மூச்சு விடக் கஷ்டப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இனவேற்றுமைக் கோஷ்டி ஒன்றுதான் இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று பொலீஸார் கருத்து வெளியிட்டனர்.

இம் மூன்று மரணங்களும் கொலைச் சம்பவங்கள் என்று பொலீஸார் பதிவு செய்தனர்.

மேலதிக விவரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (உ-எ)

## குடாநாட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லத்தில் கலந்து கொண்டனர்.

பொதுக் கூட்டம் ஒன்றும் அங்கு நடைபெற்றது.

நீர்வேலி, அச்சுவேலி, ஊரெழு, உரும்பராய் ஆகியஇடங்களிலும் தனியார் ஊழியர், பாடசாலை மாணவர் ஆகியோர் நேற்றுக் காலை 9 மணி முதல் 11 மணிவரை இரு மணித்தியாலம் — வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வீதிமறிப்புப் போராட்டத்தின் போது பருத்தித்துறைவீதி, நீர்வேலி குறுக்கு வீதி, பலாலிவீதி, புன்னலைக் கட்டுவன் வீதி என்பவற்றினூடாக நடைபெறும் வாகனப் போக்குவரத்துகள் ஸ்தம்பிதமடைந்தன. இவ்வீதி மறியல் போராட்டத்தில் இரண்டாயிரம் மாணவ மாணவிகள் உட்பட சுமார் நாலாயிரம் மக்கள் கலந்து கொண்டனர். (உ-10)

## அகதிகள் நடத்திய சத்தியாக்கிரகம்

முள்ளியவளை, நவ 15

முல்லைத்தீவு, செம்மலை, அளம்பில் பகுதிகளில் தங்கியுள்ள திருமலை அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் திடீரென மறுக்கப்பட்டதை ஆட்சேபித்து கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் அலுவலகத்தின் முன் சத்தியாக்கிரகம் நடைபெற்றது.

திருமலையைச் சேர்ந்த 620 அகதிக் குடும்பங்களின் பிரதிநிதிகள் இந்தச் சத்தியாக்கிரகத்தை நடத்தினர்.

உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் முல்லைத்தீவு பிரசைகள் குழுப் பிரதிநிதிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினுர்.

அரச அதிபரின் கோரிக்கையை அடுத்து பிரஸ்தாப அகதிகளுக்குமூன்று நாட்களுக்கு உணவு வழங்க பிரசைகள் குழுப் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுத்தனர்.

இந்தத் தற்காலிக ஏற்பாட்டையடுத்து சத்தியாக்கிரகம் மேற்கொண்ட அகதிகள் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றனர். (உ-93)

## தொழில் நுட்ப மாணவரும் பங்கு பற்றினர்

யாழ்ப்பாணம், நவ.15

யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களும் நேற்று உண்ணுவிரதம் மேற்கொண்டனர்.

கடத்தப்பட்ட விஜிதரனை விடுவிக்கக் கோரி யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்திருக்கும் உண்ணுவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே அவர்கள் ஒருநாள் அடையாள உண்ணுவிரதத்தை மேற்கொண்டனர். (உ-10)

## கடித உறை வெளியீடு

கொழும்பு, நவ. 15

புதிய விமானக் கடித உறை எதிர்வரும் திங்கள் தொடக்கம் புழக்கத்தில் விடப்படவுள்ளது.

புதிய விமானக் கடித உறையின் பெறுமதி 6 ரூபா ஆகும். (உ-எ)

## திருமலையில் கொள்ளை

திருகோணமலை, நவ. 15

திருகோணமலை நகரில் ஹஸ்கிஸன் வீதியில் உள்ள ஜெகநாதன் கம்பனி அலுவலகத்தினுள் காலை நேரத்தில் புகுந்த இரண்டு ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் ஒன்றரை லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளை இட்டனர்.

இச் சம்பவம் கடந்த 7ஆம் திகதி காலை 10 மணியளவில் நடைபெற்றது.

தகவல் கிடைத்து பொலீஸார் அந்த இடத்துக்கு வந்தனர். சுற்று வட்டாரத்தில் தேடுதல் நடத்தினர்.

பின்னர் அப் பகுதியில் இருந்து பலரைக் கைது செய்து பொலீஸ் நிலையம் கொண்டு சென்றனர். அன்று மாலையே அனைவரும் விசாரணை பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப கொள்ளை இடம்பெற்ற ஜெகநாதன் கம்பனி பிரிமாமா ஆலைக் கொந்தராத்து வேலை ஒன்றை மேற்கொண்டு வருகிறது. (உ-எ-150)

## உயர் நீதிமன்றில் சமரசத் தீர்வு

கொழும்பு, நவ. 15

இராணுவப் பயிற்சி பெறும்படி ரயில்வே பொது முகாமையாளர் உத்தரவிட்டதை ஆட்சேபித்து ரயில்வே பாதுகாப்பு ஊழியர் பலர் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டது என்று கூறி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணைகள்முடிவடைந்தன.

இம்மாதம் 27 ஆம் திகதி இவ்வழக்கு மீண்டும் உயர் நீதிமன்றம் வரும்போது சமரசத் தீர்வு ஒன்று முன்வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## ஜனனதினம்

புதுடில்லி, நவ. 14

மறைந்த இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 97 ஆவது ஜனன தினம் நேற்று இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டது. (உ)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 15 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power Station Road, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org